
# ஆத்ம ஜோதி



ஆனி – 1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
-சுத்தானந்தர்

ஆசிரியர்: நா. முத்தையா

ஜோதி: 31 — சித்தார்த்தி ஞ ஆனி மீ 1உ — (15-6-79) சுடர்: 8


## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஒழுக்கம் | 337 |
| பிரார்த்தனை | 338 |
| முன்மாதிரியான கோயில் நிர்வாகம் | 339 |
| வாழ்க்கையில் கிரியைகள் | 343 |
| இறைநாமத்தின்சக்தி | 347 |
| முருகன் அழுதான் | 348 |
| வாழ்க்கை விளக்கம் (3) | 352 |
| அன்பு வழி | 356 |
| ஆத்ம சிந்தனை | 357 |
| தியானம் | 360 |
| மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா? | 366 |
| விதி | 370 |
| சமதர்மம் போதித்த வீர சைவர் | 373 |
| தியானமும் வாழ்க்கையும் | 374 |
| நவக்கிரக வணக்கம் | 379 |
| ஐம்புலன்களையும் கட்டுப்படுத்துவதனால் | 383 |


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர் ,

அன்பு வணக்கம்

தங்கள் கைகளில் கிடைக்கும் இந்தச் சுடர் 31ஆவது ஆண்டு எட்டாவது சுடராகும். கடந்த 30 ஆண்டுகளாகச் சோதிக்குக் கிடைத்த அன்பர்களின் ஆதரவு எதிர்காலத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு அன்பர் இல்லத்திலும் ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எமது தலையாய குறிக்கோள். ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம் புதிய ஆண்டுச் சந்தா 10 ரூபாவை அனுப்பிவைப்பதோடு ஒவ்வொரு புதிய அங்கத்தவரை அறிமுகம் செய்துவைத்தால் சோதியின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டுபுரிந்தவர்களாவீர்கள்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி (இலங்கை)

நா. முத்தையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம்

ஒழுக்கம் போர்க்களம் போன்றது. அதில் வாழ வேண்டுமானால் ஓயாமல் நம் மனத்தோடு போராட வேண்டும். —ரூசோ

உண்மையான நாகரீகத்தின் சின்னம் எது? விஞ்ஞான வளர்ச்சியோ, மக்களின் நடை உடைபாவனைகளோ அல்ல. மக்களின் ஒழுக்கமும் நேர்மையுமே ஒரு தேசத்தின் நாகரீகத்தை எடுத்துக் காட்டக்கூடிய சின்னங்களாகும். —எமர்சன்

தீய செயல்களைச் செய்வதனால் உண்டாகும் சிறிது நேர இன்பங்களை விட நல்ல செயல்களைச் செய்வதனால் ஏற்படும் கொடிய துன்பங்களே சிறந்தவை. —நேதாஜி

மற்றவர்கள் உனக்கு என்ன செய்யக்கூடாதென்று நினைக்கிறாயோ அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்யாதே. குற்றங்களில் பெரிய குற்றம் தன் குற்றங்களைத் திருத்த முயலாததுதான். —கன்பூசியஸ்

நாம் செல்வர்களாக இருக்க வேண்டுமென்ற கடமை ஒன்றுமில்லை. ஆனால் ஒழுக்கமுள்ளவராக இருக்க வேண்டுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும். —பெர்னாட்ஷா

உங்கள் திறமையைப் புலப்படுத்த நீங்கள் செய்யும் நூறு சொற்பொழிவுகளைவிட உங்கள் நடத்தை ஒன்றே போதுமானது. —காந்தியடிகள்

மனிதன் எதை நினைக்கிறானோ அதே ஆகிறான். அவனது நினைப்புகளின் தொகுதியே அவனுடைய ஒழுக்கம். —சேம்சு ஆலன்

ஆசிரியர்கள் ஒழுக்கத்தைப் புத்தகங்களிலிருந்து கற்றுக் கொடுக்க முடியாது. தங்களுடைய நடைமுறையிலிருந்துதான் கற்றுக்கொடுக்க முடியும். —காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப்பணி கொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானுமதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

வேண்டும் வேண்டும் மெய்யடியாருள்ளே
விரும்பி எனையருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே, அருமாமணி முத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்டனேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே. — மாணிக்கவாசகர்

மனமெனும் தோணிபற்றி
மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும் போதறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடையகோவே. — திருநாவுக்கரசர்

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே
அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே
எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே
தம்முயிர்போல் எவ்வுயிருந்தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக்கு ஏவல் என்று செய்வேன் பராபரமே.
—தாயுமானவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்மாதிரியான கோயில் நிர்வாகம்

ஆசிரியர்

கோயிலுக்காக மக்களா? மக்களுக்காகக் கோயிலா? என்றொரு கேள்வி எழுப்பப்பட்ட போது மக்களுக்காகவே கோயில் என்று ஆணித்தரமான பதிலை மீடான் மாரியம்மன் கோயில் நிர்வாகத்தினர் கூறினர். இறைவன், அடியவர்களுக்கெல்லாம் அடியவன். வந்தி என்னும் பிட்டு வாணிச்சிக்காக மண் சுமந்து அடியும் பட்டான் இறைவன். செட்டிச்சி அம்மையின் மகளுக்காகத் தாயும் ஆனான் இறைவன். இறைவனின் இந்தப் பண்பு கோயில் நிர்வாகிகளிடமும் இருக்க வேண்டும் என்பது அவர்களுடைய எண்ணம். மக்களுக்காகக் கோயில் நடத்தப்படுமானால் கோயிலுக்காக மக்கள் வாழ்வர் என்பது சொல்லாமலே அமையும்.

மீடான் மாரியம்மன் கோயில் நிர்வாகத்தினர் மக்களைப் பக்தி வழியில் வழிபடுவதற்கான பல நெறிகளை வகுத்துச் செயல்படுத்திய தோடு சமூகப் பணிகள் பலவற்றையும் செயலில் காட்டியுள்ளனர். சமயமும் சமுதாயமும் ஒன்று; சமயப்பணியும் சமுதாயப்பணியும் ஒன்றுதான். இதனை ஏட்டளவில் வைத்துக் கொண்டிருக்காது செயலிலும் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

> ''அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்
> புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கலனொன்
> றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
> சிற்றுயிர்க் குற்றதுணை''

என்பது ஆதி குமரகுருபர சுவாமிகளுடைய வாக்காகும். இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழுகின்றது மீடான் மாரியம்மன் கோயில் நிர்வாகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக இரண்டு இந்துநேசியன் பள்ளிகளையும் பல மதப் பள்ளிகளையும் நடத்திக் கொண்டுவருகின்றது. மதப் பள்ளியில் கற்பிக்கும் பத்துக்குமேற்பட்ட ஆசிரியர்களுக்குக் கோயில் நிர்வாகமே பல வள்ளல்களின் உதவியோடு சம்பளம் கொடுக்கின்றது. மதப்பள்ளிகளில் கற்கும் பிள்ளைகள் எவரிடமும் எவ்வித பணமும் பெற்றுக்கொள்வதில்லை. அப்பிள்ளைகளுக்குப் புத்தகங்களும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன.

இரு இந்துனேசியப் பள்ளிகளில் கற்கும் மாணவர்களில் பாதிப்பேருக்குமேல் ஏழைப்பிள்ளைகளானபடியினால் இலவசக் கல்வியே பெறுகின்றனர். இப்பள்ளிகள் இரண்டும் அங்குள்ள ஆசிரியர்களின் திறமையினால் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் முன்னணி வகிக்கின்றன.

கோயில் நிர்வாகத்தின் பேரில் வாங்கிவிடப்பட்டிருக்கும் மோட்டார் வண்டி ஒன்று சமூகத்தின் பல துறைகளிலும் இலவசமாகவே உழைத்துக்கொண்டிருக்கிறது இந்துனேசியா முழுவதிலும் பரந்திருக்கும் காரோ வம்சத்தினர் இந்து சமய ஆசாரங்களை அனுட்டித்தற்கான தொண்டுகளையும் புரிந்து வருகின்றது.

பாலி இந்துக்கள் தமிழ் இந்துக்களின் கோயில்களில் வந்து வழிபாடாற்றவும், தமிழ் இந்துக்கள் பாலி இந்துக்களின் வழிபாடுகளில் சென்று கலந்துகொள்வதற்குமான ஏற்பாடுகளைச் செய்து அதனை நடைமுறைப் படுத்தி வருவது சமூக ஒற்றுமைக்கு ஒருஎடுத்துக்காட்டாகும். காரோ வம்சத்தினர் இந்துனேசியாவின் பூர்வீகக் குடிமக்கள் என்பது சரித்திர ஆசிரியர்களால் நிரூபிக்கப்பட்டிருப்பதோடு அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. அவர்களுடைய தோற்றமும் பழக்கவழக்கமும் தமிழ் இந்துக்களுடையதைப்போலவே அமைந்திருக்கின்றன. காரோக்களும் தமிழ் இந்துக்களும் ஒருவரை ஒருவர் சந்திக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ஒருவரை ஒருவர் கட்டித்தழுவியும், பணிந்து வரவேற்பதும், வெற்றிலை கொடுத்தும், அட்சதையைத்தலையில் போட்டும் ஆசிர்வதிப்பதும் ஆதி தொடங்கியே அவர்கள் இந்துக்களாய் வாழ்ந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

கோயில் நிர்வாகம் கோயில்கள் தோறும், பாடசாலைகள் தோறும், கிராமங்கள் தோறும் தியான சபைகள் ஏற்படுத்தி தியானப்பயிற்சிகள் அளித்து வருகின்றது. சமய உண்மைகளை அறிந்து கொள்வதற்கும் சமய அநுட்டானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இச்சபைகள் பேரிதும் உதவியாய் இருக்கின்றன. பலமாணவர்களும் வாலிபர்களும் தியானச் சபைகளில் ஈடுபட்டுப் பெரிதும் பயன் அடைந்து வருகின்றனர்.

இத்தியானச் சபைமூலம் வாரந் தோறும் 2 மணித் தியாலங்களுக்குக்குறையாத அந்தர் யோகப் பயிற்சிகளும் மாதம் ஒரு முறை ஒரு முழுநாளைக்கான அந்தர்யோகப் பயிற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இவற்றினுல் கோயில்களில் நடைபெறும் தேவையற்ற ஆடம்பரமான செலவுகளும் விழாக்களும் தவிர்க்கப்படுகின்றன.

பாலி இந்துக்களையும் தமிழ் இந்துக்களையும் காரோ இந்துக்களையும் ஒன்று சேர்த்து மதகாரியங்களை நடத்தி வரும் 'பரிசாடா' என்னும் மதச்சபை பல அரியபெரியபணிகளைப் புரிந்து வருகின்றது. 'பரிசாடா' என்பது அரசாங்கத்தினுல் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்து மத பாதுகாப்புச் சபையாகும். இச்சபை தயாரிக்கும் இந்துமதச் சீர்திருத்தச் சட்டங்களை அரசாங்கம் அப்படியேதாமும் அமுல் நடத்துகின்றது. அலகு குத்திக்காவடி எடுத்துத் தெருவில் கூத்தாடுதல், நெருப்பில் நடத்தல், கோயில்களில் பலியிடுதல் போன்ற அனுச்சாரமான செயல்கள் சட்டமூலம் தடைசெய்யப்பட்டுள்ளன. இதனை எல்லா இந்துக்களும் வரவேற்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கூடிக்கூத்தாடுவதும் குடிப்பதும் தான் கடவுள் வழிபாடு என்றிருந்தகாலம் மலையேறிவிட்டது. மக்கள் தியானவாழ்க்கை மூலம் தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவர்களிற் பலர் குடிவகைகளையும் மாமிசபோசனத்தையும் வெறுத்து ஒதுக்கியிருக்கின்றனர்.

கோயில் நிர்வாகமே பல புரோகிதர்களை தகுதி நோக்கிநியமித்து பரிசம் போடுதல், கலியாணம், காது குத்துதல், சாந்திக்கல்யாணம், அபரக்கிரியைகள் போன்றவற்றை நடத்திவைக்கிறது. எல்லாக் கிரியைகளிலும் பிரார்த்தனையும் அவைசம்பந்தமான பேச்சுகளும் முக்கிய இடம்பெறுகின்றன.

தமிழ் இந்துக்களின் விவாகப் பதிவுக்குரிய அதிகாரத்தை அரசாங்கம் மீடான் மாரியம்மன் கோயில் நிர்வாகத்திற்கு வழங்கி உள்ளது. இதனுல் ஏழைகள் முதல் யாவரும் எவ்வித செலவுமின்றி விவாகப் பதிவுக் கொப்பியை உடனே பெற்றுக்கொள்ள முடிகின்றது. குடும்ப ஒற்றுமையீனம், விவாக ரத்து போன்ற எல்லா விஷயங்களும் கோயில் நிர்வாகத்திடமே கொடுக்கப் பெற்றுள்ளது. எவ்வித பிரச்சனைகளையும் எவ்வித செலவுமின்றித் தீர்த்துக் கொள்ள முடிகின்றது.

சிறிய வருமானம் உடைய கோயில் ஒன்றினுல் இத்தகைய திருத்தொண்டுகளைச் செய்ய முடியுமானுல் பெரிய கோயில்கள் யாவும் எத்தகைய பெருந்தொண்டுகளைச் சாதிக்கமுடியும்.

---

அன்பே கடவுள்; அன்பே கடவுளை உணரும் வழி; அன்பே அறிவின் அணி. மனங்கடந்து உள்ளுணர்வாயிருப்பதே கடவுளன்பு; அதுவே உயிரின்பம்.

—சுத்தானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் கிரியைகள்

வித்துவான் மு. கந்தையா-ஏழாலை

நாம் வாழும் பரந்து விரிந்த இப்பிரபஞ்சம் ஆழ அகலங்காணமுடியாத ஒரு பெருங்கடல். இக்கடலின் இக் கரையும் உயிர்க்குத்தான். அக்கரையும் உயிர்க்குத்தான். இரு கரைக்கும் உரித்தாளியான உயிர் இக்கரையிலிருந்து அக்கரைக்குப் புரியும் மகா யாத்திரையே வாழ்க்கை எனப் படுகிறது.

இக்கரை இருள்மயமானது. அக்கரை ஒளிமயமானது. இக்கரை வாழ்வு அவலம், கவலை முதலிய அசிங்கங்களோடு கூடியது. அக்கரை வாழ்வு, திருப்தி, மகிழ்ச்சி ஆனந்தம் என்ற அதிசயப் பண்புகளோடு கூடியது. இக்கரை வாழ்வி னியல்பு நிலையாமை மயம். அக்கரைவாழ்வினியல்பு சாஸ் வதமாக நிலைத்திருக்கும் அசையாமை மயம். இது அழிநிலை வாழ்வு. அது அழியா நிலைவாழ்வு. இது மரணத்துவம், அது அமரத்துவம். இது ஆணவ கன்ம மாயைகளின் பல வந்தத்தால் அவற்றுக்கு அடிமைப்பட்டு அவலமுறும் அடி மைநிலை. அது பேரின்ப காரணனாகிய கடவுளுக்குத் தன் அன்புரிமையால் தானே தன்னை அடிமையாக்கி நிற்கும் சுதந்தர நிலை.

இவ்வகையில் சிந்திப்பார்க்கு இக்கரை வாழ்வாகிய இம்மைவாழ்வும் அக்கரை வாழ்வாகிய அம்மை வாழ்வும் மடுவும் மலையும் போல் ஒன்றுக் கொன்று நேரெதிரான வித்தியாசங்களோடு கூடியிருத்தல் புலப்படாமற் போகாது எனில், இத்தகை வேறுபாட்டுக்குக் காரணமென்ன? என்பது கேள்வி. சைவசித்தாந்தம் தெளிவாகச் சொல் கின்றது. பழைய ஆகம சாஸ்திர அறிவுக்கும் புதிய விஞ் ஞான அறிவு நிலைக்கும் பொருத்தமாகவே சொல்கின்றது. இக்கரைவாழ்வில் உயிர் மல மாயா கன்மங்களோடு கூடி மாயாவியல்பான வாழ்க்கையில் மருண்டு போய்த் தானல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாததைத் தானென்றுந் தனதல்லாததைத் தனதென்றும் அபிமானித்துக் கொண்டிருப்பது தான். அக்காரணம் என்பதுதான் சைவசித்தாந்தத் தெளிவு. அதன் பிரகாரம் இம்மை வாழ்வில் உயிரின் அகச் சூழ்நிலையும் அசுத்தம், புறச்சூழ் நிலையும் அசுத்தமே. இதனால் இக்கரையிலிருந்து அக்கரைக்கு மாறும் மாற்றம் அசுத்தத்திலிருந்து சுத்தத்திற்குமாறும் மாற்றமென்றே கொள்ளலாம்

உயிரியல்பையும் உடலியல்பையும் வாழ்வியல்பையும் அமைந்துபோன இவ்வசுத்தத்தை நீக்குதற்குச் சைவத்திலுள்ள சாதனை வழிகள் கிரியைகள் எனப்படும் கடவுள் படைத்த உடலையும் உடலின் உட்கருவிகளாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பனவற்றையும் புறக்கருவிகளாகிய மெய் வாய் கண் மூக்குச் செவி என்பவற்றையும் சிவத்தியானத்துக்கேற்றதாக வளப்படுத்திக் கொண்டு மந்திரம் பாவனை என்ற இரு அம்சங்களுடனுஞ் செய்யப்படும் செயல்கள் அனைத்தும் கிரியைகள் என்ற பிரிவில் அடங்கும்.

சைவ சமயத்தவர் ஒருவருக்குப் பிறப்புமுதல் மரணம் வரையும் மட்டுமல்லாது மரணம் முதல் மறு பிறப்பெய்தும் வரைகூடக் கிரியைகள் குறிக்கப்பட்ட நபர் தாமே எஜமானுயிருந்து செய்வனவாம். மரணத்தின் பின் உள்ளவை அவர்க்காக அவருடைய ஞாதி ஒருவர் எஜமானுயிருந்து செய்வனவாம். மரணத்துக்கு முந்திய கிரியைகளிலும் பருவமடையாப் பாலர்களாயிருப்போருக்குப் பிறர் எஜமானராயிருந்து செய்யுங்கிரியைகளும் உள்ளனவே. வாழ்க்கைக் காலக்கிரியைகள் பூர்வக்கிரியை என்றும் மரணந்தொட்டு மேல் நிகழ்வன அபரக்கிரியைகள் என்றும் பெயர் பெறும்.

இனி இக்கிரியைகள் எதன் பொருட்டு? என்பது சிந்திக்கத்தக்கது. இவை யெல்லாம் வாழ்வை வளம்படுத்தத் தான் என்பது ஒருசாரார் கருத்து. இக்கிரியை ஒன்றுஞ் செய்யாத மற்றையசமூகத்தினர் வாழவில்லையா? என்று இக்கருத்தோடு முரண்பட்டுக் கொள்வாருஞ் சிலர். சைவ சமூகத்திற் கிரியைகள் கால அடைவின் வலுவிழந்து கொண்டு போவதற்கு இம்முரண்பாட்டுக்கருத்தே 'முழுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமும் என்றால் மிகையாகாது. மற்றுஞ்சிலர் இக் கருத்தின் நிழலில் ஆறுதல் பெற்றுக்கொண்டு கிரியைகளினால் இங்கு வாழ்க்கைக்கு ஆவதொன்றில்லை. இது முழுதும் கடவுளையடையும் அம்மைப் பேற்றுக்காகத்தான் என்பர். முன்னைய கருத்தின் பொருந்தாமையை உற்றுணர்வது அவசியமாகும். கிரியைகளை மேற்கொள்ளாத சமூகமும் வாழ்கிறது.

மேற்கொள்ளுஞ் சமூகமும் வாழ்கிறது என்றால் வாழ்வு என்ற பெயர் மாத்திரைக்குச் சரியே தவிர அவ் வாழ்வும் இவ்வாழ்வும் பண்பளவில் ஒன்றல்ல. நம் சூழலிலுள்ள பிராணிகளும் உணவுதேடி உண்டு உழைத்து பாலுறவு கொண்டு வர்க்க விருத்தி செய்து வாழ்கின்றனதானே! அதற்காக பிராணிகள் வாழ்வும் நம் வாழ்வும் ஒன்று என்போமா? அதற்கு நேரொப்பாகத்தான் கிரியைகளும் மனித வாழ்க்கைக்கும் கிரியை தழுவாத மனித வாழ்க்கைக்கும் இடையிலான வித்தியாசம் இருக்கிறதை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும். இனி,

சைவ விளக்கத்தில் வாழ்க்கைப்பேறு கடவுட்பேறு இரண்டும் தனித்தனியான இருபகுதிகளல்லவாகும். வாழ்க்கைப் பேறு என்று கருதப்படும் ஒவ்வொன்றும் கடவுட்பேற்றுக்கு வகை செய்யத் தக்கதாக அமையாவிட்டால் அது பேறல்ல என்பதே சைவத்தின் நிலை.

''கற்றதனால் ஆயபயனென்கொல்'' என்ற திருக்குறள் இந்தச் சைவக்கருத்தை நியாயமாகச் சூசித்திருக்கின்றது. எனவே வாழ்க்கை வளமும் ஆத்மீகத் தூய்மையும் ஒருங்கு ஏற்படுதற் பொருட்டாகவே சைவத்திற் கிரியைகள் அமைந்துள்ளன என்ற விளக்கம் ஒருதலையாக வேண்டப்படும்.

இக்கிரியைகளில் பூர்வக்கிரியைகள் கர்ப்பாதானம் முதல் விவாகம் ஈறாக 24 அபரக்கிரியைகள் உத்கிராந்திக் கிரியை முதல் சபிண்டீகரணம் வரையிற் பதினாறு சைவ வாழ்க்கையில் ஒவ்வொன்றற்கும் முக்கியத்துவமுண்டு. அவற்றின் முக்கியத்துவம் பற்றிச் சைவக்கிரியைகள் பற்றிய நூல்கள் விரிவாகக் கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள் என்ற நூலில் இவ்வகையில் உபயோகமாகக் கூடிய ஒன்று.

இவ்வெல்லாக் கிரியைகட்கும் வேண்டிய தகுதிப்பாட்டை விளைவிப்பது சைவ அநுட்டானக் கிரியையாகும். அதனால் அது இல்லாமல் எக்கிரியையும் செய்ய எவருக்கும் அதிகாரம் இல்லை. செய்பவர், செய்விப்பவர், செய்யப் பெறுபவர் என்ற மூன்று பகுதியார்க்கும் சைவ அநுட்டானம் ஒரு அடிப்படைத் தகுதியாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது ஆதலால் இதன் பொருட்டுச் சைவ சமயத்தவர் ஒவ்வொருவரும் தமது ஐந்தாவது அல்லது ஏழாவது வயசிலேயே சமய தீக்ஷை பெற்றுக்கொள்ள வேண்டிய கடப்பாடு உண்டு.

சைவ அனுட்டானக் கிரியையின் சிறப்பம்சங்களைக் கவனத்திற்கொள்ளுதல் அத்தியாவசியமாம். ஒருவர் தம்மை உள்ளும் புறமுந் தூய்மை செய்து கொள்ளுதல் இதன் முதலம்சம்.

வேஷ்டி தோய்த்து ஸ்நானம் பண்ணல், விபூதி ஸ்நானம், மலஸ்நானம், மந்திர ஸ்நானம் என்பன செய்தலால் புற உடல் சார்ந்த அசுத்தமெல்லாம் நீங்கி மனித சரீரம் தெய்வ சாரமாக அமைகிறது. ஆசமனஞ் செய்தல் மூலம் உள்உடல் தூய்மையாகின்றது. பிராணாயாமத்தின் மூலம் மனஒருமைப்பாடு ஏற்படுகிறது. சிவமந்திரங்களை உச்சரித்தவர் மூலம் சிவ நினைவு அழுத்தம்பெறுகிறது. அதன்மேல் தோத்திரப்பாடல்களைப் பாடுதலால் பக்தி உண்டாகிறது. இவையெல்லாவற்றினாலும் ஒருவர்தான் உள்ளும் புறமுஞ் சிவனாய் இருந்து சிவத்தியானம் பண்ணும் பயிற்சி ஏற்படுகின்றது. இப்பயிற்சியின்மூலம் எக்கிரியையைச் செய்தாலும் சிவத்தன்மையாகச் செய்யும் வாய்ப்பு உள்ளதாகும். செய்பவர்தான் சிவபாவனையோடிருந்து செய்கிற கிரியைகள்தான் உண்மையான உயர் பலனைத்தரும். அதனால் வாழ்க்கை வளங்களுஞ் செழிக்கும். வாழ்க்கைக் கட்டமுடிவில் உரியகாலத்தில் சிவப்பேறு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ராமதாஸ் அருளுரைகள் (34)

# இறை நாமத்தின் சக்தி

தமிழ் வடிவம்:- ம. சி. சிதம்பரப்பிள்ளை

ஒரு பெண் அடியாள் தனது குருவுக்குத் தொண்டு செய்து வந்தாள். குரு எவ்வாறு சிரத்தையுடன் இறை நாமத்தை உச்சரிப்பாரோ அவ்வளவு பக்தியுடன் இப்பெண் அடியாளும் ஜெபித்து வரலானாள். பசுவின் சாணியைப் பிடித்துக் காய வைத்து விறகாகப் பாவிப்பதற்கு தினமும் வேலை செய்வாள். இவ்வாறு செய்து வெயிலில் காய்வதற்காக ஒரு நாள் வைத்தாள். அயலில் உள்ள இன்னும் ஒரு பெண் இதே வண்ணம் சாணி றொட்டிகளைத் தப்பி, அடியாளின் சாணி உருண்டைகளுக்கருகில் காய வைத்தாள். ஏதோ ஒரு விதமாக இருவர்களது சாணி றொட்டிகளும் கலந்துவிட்டன. அயலவள் தனக்குரிய சாணி றொட்டிகளோடு அடியவளுடைய றொட்டிகளிற் சிலவற்றையும் எடுக்க எத்தனித்தாள். இதனைக் கேள்வியுற்ற குருவானவர் எனது அடியாள் உருட்டிய சாணி உருண்டைகளை மிகவும் இலகுவாகக் கண்டு பிடிக்க முடியும் என்று கூறிவிட்டு ஒவ்வொரு சாணி றொட்டியையும் எடுத்துத் தனது காதருகே வைத்தார். சிலவற்றில் இறைவனது நாமம் ஒலிப்பது கேட்டது. எதனிடம் இறை நாமம் ஒலிப்பது கேட்கமுடியுமோ அவைகளை வேறுக்கினார், இவ்விதம் இரு பெண்களுக்குமிடையே வந்த பிணக்கை நீக்கிவிட்டார்.

என்ன விந்தை; பெண் அடியாள் நின்றும், இருந்தும் கிடந்தும் எத்தொழிலைச் செய்தாலும் இறை நாமத்தை இடைவிடாது உச்சரித்த வண்ணமாகவே இருப்பதனால் அச்சொற்களை சாணியின் ஈரலிப்புத் தன்மை ஈர்த்து அது காரணமாக அச்சொற்கள் எதிரொலித்த வண்ணமிருந்தன.

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் அழுதான்

— செ. மயில்வாகனம் —

நாம் சிரிக்க விரும்புகிறோம்; அழ விரும்புவதில்லை. ஆனால் ஆழ்ந்து சிந்தித்தாற் சிரிப்பினால் நிறைவேறாத எத்தனையோ கருமங்கள், அழுகையால் நிறைவேறி விடுவதைக் காண்போம்.

பேசத் தெரியாத குழந்தை யொன்று எப்போதுஞ் சிரித்தவண்ணங் கிடக்குமானால் தாய் அதற்குப் பாலூட்டவும் மறந்து விடுவாள். அது அழத்தொடங்கினாற் குழந்தைக்குப் பசி வந்துவிட்டது என்பதை அறிந்து தாய் பாலையூட்டுவாள். அதற்கு வருகின்ற நோயையுந் தூக்கத்தையுங்கூட அழுகைதான் மற்றவர்களுக்கு உணர்த்துகின்றது.

வளர்ந்தவர்களிடத்திலும் ஆற்றமுடியாத துன்பம், கவலை என்பன ஏற்படும்போது அழுகை தோன்றுகின்றது. மற்றவர்களைக் கொண்டு செய்விக்க முடியாதவற்றைக்கூட அழுகை செய்வித்துவிடும். நேரத்துக்கு உண்ணவே வழியற்ற குடும்பத்திலேயுள்ள ஒருபெண், கணவனைக்கொண்டு விலையுயர்ந்த சேலையொன்றை வாங்குவிக்க எண்ணுகிறாள். அவள் கணவனைக்கேட்டால் அது நிறைவேறுமா? ஆனால் அவள் இரண்டு சொட்டுக்கண்ணீர் விட்டாற்போதும் சேலை அவள் காலடிக்கு வந்துவிடும். இன்னும் இப்படி எத்தனையோ விதமான அழுகைகளை நாம் காணுகின்றோம்.

சுருக்கமாகக் கூறினால் ஒவ்வொருவரும் ஏதோ தமது துன்பத்திற்காக அழுகிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் தனக்காக அழாத அழுகைகளும் இருக்கின்றன என்பதைக் காணும்போது நாம் ஆச்சரியப்படுவோம்.

சீர் மிகுந்த சீர்காழிப் பதியிலே சிவநெறியில் வழுவாமல் வாழ்ந்த சிவபாதவிருதயரும் அவர்தம் தேவியாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த தவத்தின் பேருய் உதித்த சிவக்கொழுந்தல்லவா திருஞான சம்பந்தராகிய தெய்வக் குழந்தை. அக்குழந் தைக்கும் குறைவேதும் உண்டாகுமோ? அது தந்தையா ருடன் தோணிபுரத்துக்குச் செல்கின்றது; தந்தையார் குளக்கரையிலே குழந்தையை விட்டு நீரில் இறங்குகிறுர்! நீராடுகிறுர். நீரிலே அவர் மூழ்கும் போது தந்தையைக் காணவில்லையென்று குழந்தை எண்ணுகின்றது; சுற்று முற்றும் பார்க்கின்றது. கோவிற் கோபுரம் அதன் கண் களிலே படுகின்றது. கைகள் கண்களைப் பிசைகின்றன மணியதரங்கள் துடிக்கின்றன- வாயாகிய மலர் விரிகின் றது "....அ....ப்...பா" என்று கூவியழுகிறது குழந்தை.

இது ஒரு சாதாரண அழுகையாக எமக்குத் தெரிய லாம். குழந்தை ஏன் அழுகின்றது? பயமா....? பசியா? எதுவுமில்லை. ஞானப்பசி தோன்றிவிட்டது குழந்தைக்கு. உண்மையான அப்பனது செவிகளிலே குழநதைகளின் அழுகையொலி விழுகின்றது. அப்பன் உமையம்மையாரு டன வருகின்றுன். அம்மை ஞானப்பாலைக் கறந்து ஊட்டு கிருள். ஞானப்பசி தணிகின்றது. திருமுறையாகிய தமிழ் மறை "தோடுடைய செவியன்" என்ற தொடக்கத்துடன் ஆரம்பமாகின்றது. குழந்தை ஞானசம்பந்தராகின்றது. ஆகவே குழந்தை ஏனழுதது என்பது இப்போது தெளி வாகின்றது.

பௌத்தமும் சமணமும் பரவித் துயர்விளைத்துநின்ற உலகிலே வேதநெறி தழைத்தோங்குவதற்காக அக்குழந் தையழுகிறது; மிகுதியான சைவத்தின் துறைகள் எல்லாம் விளக்கம் அடைவதற்காக அது அழுதது; பூதபரம்பரை பொலியவேண்டி அழுதது. இவையெல்லாவற்றுக்குமாக ஞானப்பாலை விரும்பி, வேண்டியழுதது.

அதைத் தனக்கேயுரித்தான பத்திச்சுவை சொட்டும் நடையிலே தருகிறுர் சேக்கிழார் பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

என்பது அவர் வாக்கு.

திருஞான சம்பந்தர் யார்? அவர் முருகப் பெருமானுடைய அவதாரம்.

''பிலி வெந்துய ராவி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட வாது கொண்டரு—ளெழுதேடு
பேணி யங்கெதி ராறு சென்றிட
மாறனும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு-முருகோனே''

என்று அருணகிரிநாதர் சொல்லுகின்றார்.

திருஞானசம்பந்தராகப் பிறந்து உமையம்மையாரின் பாலுக்காக முருகனழுததை இங்கு கண்டோம். இன்னொரு சந்தர்ப்பத்திலே உமையம்மையாரின் பாலையுண்ட பின்பும் முருகனழுதான் என்று கூறினால் ஏன் அழுதான் என்று தானே யாருங் கேட்பார்கள்.

அசுரரை யழிப்பதற்கென்று தோன்றுகிறான் முருகன், அந்த இளமுருகன் அழகிய உலகையெல்லாம் பெற்றவரும் பொற்பாவை போன்றவளுமாகிய அன்னை உமையம்மையாரின் திருமுலைப்பாலை யருந்துகிறான். அருந்தியவன் சரவணப் பொய்கையாகிய பூந்தொட்டிலிலே கண்வளருகின்றான். அவனுக்கு ஒன்று நினைவு வருகின்றது. அதை நினைத்தும் அழுகின்றான். நினைத்த அது என்னவாயிருக்கும்?

முருகப்பெருமானைத் தங்கள் கரங்களிலே ஏந்தவும் முலையூட்டி வளர்க்கவுந் தக்க புண்ணியஞ் செய்தவர்கள் கார்த்திகைப் பெண்கள்-அறுவர். அவர்களது எண்ணம் இன்னும் நிறைவேறவில்லை. ஆதலால் அவர்களுடைய முலையை (முலையமுதத்தை) விரும்பி அழுவது போல விம்மி விம்மி யழுகின்றான் இளமுருகன். அந்த அழுகையொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் கேட்க எல்லோருக்கும் மகிழ்ச்சி பிறக்கிறது. அழுகையைக் கேட்டு முருகன் பிறந்துவிட்டான் என்பதை யறிந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி அது.

எல்லோரும் மகிழ்ந்தார்கள் என்பது உண்மையா? இல்லை. அசுர குலம் மகிழவில்லை; அது அழத் தொடங்குகின்றது. என்னையழிப்பதற்குரிய ஞானமூர்த்தி பிறந்து விட்டான் என்பதையறிந்த சூரன் அஞ்சி அழுகிறான். என்னைத் தனது வேலினால் வற்ற வைக்கப் போகின்றான் என்று பயந்து கடல் குளறுகின்றது. என்னைத் துகளாக் கியழிக்க முருகன் வந்து விட்டான் என்று கிரௌஞ்ச மாகிய குன்று (மலை)பயந்து புலம்புகின்றது. முருகனது அழுகையுடன் கடலும் குன்றும் சூரனும் அழும் ஒலியும் கலந்து கேட்கின்றது.

அசுர குலம் அழத் தொடங்கிவிட்டது. அக்குலத் துக்கு இது முதலனுபவம். இராவணன் காலத்திலே ஒரு நாள் இயமனுக்கும் ஒரு முதலனுபவம்—புது அனுபவம் கிடைத்தது. இதுவரை அசுர குலத்துயிரின் சுவையைக் கூற்றுவன் அறிந்ததில்லை. அவனுக்குச் சொல்ல முடியாத —அனுபவிக்கமுடியாத ஆசையாகப் பேராசையாக அது இருந்தது. ஓர் அசுரனுடைய உயிரையாவது எடுக்கலாம், சுவைக்கலாம் என்று இடைக்கிடை ஆசைப்படுவான். ஆனால் அந்த ஆசையோடு இராவணனுடைய பயங்கர மான தோற்றமும் மனதிலே தோன்றும், தோன்றவே அவ்வாசை மனதிலேயே சீரணமாகிவிடும். இந்த நிலை யிலே கூற்றுவன் இருக்கும் போது தான் தசரத குமார ஞகிய காகுத்தன் (ஸ்ரீ ராமன்) தனது கன்னிப் போரிலே தாடகையை வதஞ் செய்தான். அன்று தான் அசுரர் உயி ரைச் சுவைக்கும் அனுபவம் - அந்தகனுக்கு முதன் முத லாகக்கிடைத்தது. இது அவனுக்குக் கிடைத்த சந்தோஷ மான முதலனுபவம் முருகனழுதபோது அசுரகுலம் அழுத அனுபவம் துக்கமான முதல் அனுபவம்.

அழுதறியாத அசுரகுலம் அழத் தொடங்கி விட்டது. அதைச் செய்தது குறிஞ்சிக் கிழவனுகிய முருகனது அழு கையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை விளக்கம் (3)

அமரர் து. குமாரசாமி-மீடான்

விகாச முறையில் விகாசம் குறைந்த ஜீவர்களும் இருக்கிறார்கள். விகாசத்தின் ஒரு ஜீவன் எவ்வளவு அதிகம் வளர்ச்சியுற்றிருக்கிறதோ அதற்கேற்றவிதமாக அதற்குச் சரீரமும் அமைகின்றது. இந்த ஸ்தூல லோகத்தில் பல விதமான சரீரங்களை நாம் காண்கிறோம். கல், மண், பொன், வெள்ளி முதலிய பல உலோகங்களிலும் சரீரங்கள் உள்ளன. புல், பூண்டு, கொடி, செடி, மரம் முதலியவற்றிலும் சரீரங்கள் உண்டு. மிருக வர்க்கங்களிலும் மனித வர்க்கங்களிலும் சரீரங்கள் இருக்கின்றன. உலோக வர்க்கத்தில் சரீரம் எடுக்கும் ஜீவர்களைக் காட்டிலும் தாவரவர்க்கத்தில் சரீரம் எடுக்கும் ஜீவர்கள் விகாசம் மிகுந்தவர்கள்.

தாவரவர்க்கங்களில் சரீரம் எடுக்கும் ஜீவர்களிலும் மிருகவர்க்கங்களில் சரீரம் எடுக்கும் ஜீவர்கள் விகாசம் மிகுந்தவர். மனிதவர்க்கத்தில் சரீரம் எடுப்பவர்கள் மற்றவைகளைவிட உயர்ந்தவர்கள். ஒரு ஜீவன் உலோகதாவர, மிருக வர்க்கங்களில் பிறந்து இறந்து பல ஜன்மங்களுக்குப் பிறகு மனிதனாகப் பிறக்கிறான். "தெய்வாம்சமானது உலோகவர்க்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தது; தாவரவர்க்கத்தில் கனவு கண்டிருந்தது; மிருகவர்க்கத்தில் நினைவுடனிருந்தது. மனித வர்க்கத்தில் தன்னுணர்வுபெற்று விளங்குகிறது. பரிபூரணமடைந்த மனிதனிடத்தில் அதுதானேதானாக விளங்குகிறது; என்பது ஒருபெரியாரின் மொழி. இவ்வாறாக மனிதர்களாகப் பிறந்த நாம் எல்லோருமே மேற்சொன்ன விகாசமுறைக்குக் கட்டுப்பட்டு கடவுட்டன்மையில் விருத்தியடைந்து வருகிறோம். அந்த விகாசமுறைகளுக்கு கட்டுப்பட்டேதான் நாம் அநேக ஜன்மங்களை எடுக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்ஜென்மம் என்பதே சுத்த மூட நம்பிக்கை என்பது ஒரு சிலரின் எண்ணம். என்றாலும் மேல் நாட்டில் பல அறிஞர்கள் அதை ஒப்புக்கொள்வதோடு அது உண்மையே என்பதைப் பலரும் அறியும் பொருட்டு சங்கங்கள் மூலமாகவும் பிரசுரங்கள் மூலமாகவும் தக்க ஆதாரங்களோடு வெளிப்படுத்துகிறார்கள். ஆயினும் இந்நூல் புனர்ஜென்மம் உண்டா இல்லையா என்பதைப் பற்றியதல்லவாதலின் இவ்விஷயத்தை இத்துடன் விட்டுவிடுவோம். சுகம், துக்கம் இவ்விரண்டும் ஏன் உண்டாகின்றன? என்பது மற்றொரு கேள்வி.

நமக்கேற்படும் துன்பங்களுக்கும் சுகத்திற்கும் நாமே காரணமாக விளங்குகின்றோம். முன் அதிகாரத்தில் கூறிய வண்ணம் மனிதன் கடவுளின் அம்சமாகையால் அக்கடவுட்டன்மையை அனுசரித்து நடந்தால் ஆனந்தமடைகிறான். அத்தன்மைக்கு விரோதமாக நடப்பானாகில் துன்பத்தை அனுபவிக்கிறான். கடவுளின் சங்கற்பத்திற்கு அனுகூலமாய் நடப்பதுதான் புண்ணியம் எனப்படும். அதற்கு விரோதமான ஒன்றே பாவம்.

மக்கள் விகாசமடைந்து முத்திநிலையை எய்துவதை நம்நாட்டு பண்டைய அறிஞர்கள் சுருக்கமாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நாலு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றார்கள். அதாவது சரியை என்பது கோயிலுக்குச் சென்று புட்பமாலை கட்டுவது, தீபம் ஏற்றல், கோவில் அல்லது பொது ஸ்தாபனங்கட்கு தன்னால் இயன்ற உதவி புரிதல், பிச்சையிடல் முதலியன.

கிரியை என்பது கிரியைகள் அல்லது சடங்குகள் மூலமாகக் கடவுளைத் தொழுதல். யோகம் என்பதில் லய யோகம், ஹதயோகம், ராஜயோகம் எனப்பலவிதமிருக்கின்றன. சுவாசத்தை ஒரு குறிப்பிட்ட விதத்தில் நடத்தி தன்வயப்படுத்தலால் மனம் ஒருநிலைப்பட, அதினின்றும் சாதாரண மனிதர்கட்கு சாத்தியமாகாத சித்திகளடைந்தும், பிறப்பினின்றும் விடுதலையடைந்தும் பரம்பொருளோடு ஐக்கியப்படுவதேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் என்பது தன் அறிவைக்கொண்டு நல்லது எது தீயது எது என்பதையும், பிரயோசன முள்ளது பிரயோசன மல்லாதது எது என்றும், உண்மை எது? உண்மை யல்லாதது எது என்பதையும் நன்குணர்ந்து தன் மனச் சாட்சி வழிநின்று சத்தியத்தையும் கைக்கொண்டு வாழ்க்கையின் நோக்கம் இன்னதென அறிந்து சுகதுக்கங்களினாலும் லௌகீக விஷயங்களினாலும், எவ்வித இச்சைகளினாலும் பீடிக்கப்படாதிருப்பதேயாகும். இந்நான்கில் ஞானமார்க்கமே மிகவும் உயர்வானதும், கடினமானதும் முடிவானதுமாகக் கொள்ளப்படுகின்றன. மக்கள் பல பிறவிகளினால் அறிவு வளர்ச்சியும் இயற்கையாகவே அவர்களது ஆன்ம முயற்சிக் கேற்ப இந்நான்கு மார்க்கங்கள் மூலமாக முத்தியடைகின்றார்கள், இதனாற்றான்:

> ''விரும்பும் சரியைமுதல் மெய்ஞ் ஞானம் ஒரு நான்கும்
> அரும்பு மலர் காய்கனிபோலாம்.''

எனக் கூறிப் போந்தனர் தாயுமான சுவாமிகள். அதாவது ஒரு மரத்தில் கனிகள் உண்டாவதற்கு முன் அவைகள் அரும்பாகவும், பின்னர் மலராகவும், அப்பால் பிஞ்சாகவும், முடிவில் கனிகளாகவும் மாறுகின்றமை போல மக்கள் படிப்படியாக ஒரு நிலையிலிருந்து மற்றொன்றுக்குச் செல்லுகின்றனர்.

கிரியைகளை பழக்கத்தில் ஏற்பட்டதாகவும், சின்னங்களாகவும் உயர்வான சக்திகளைக் கீழுலகிற்குக் கொண்டு வரும் முறை என்றும் மூன்று பிரிவுகளாகப் பிரித்தல்கூடும். முதலாவது; பழக்கத்தினால் இதற்கு ஒரு சிறுகதை உண்டு. ஒரு சன்னியாசிக்கு நான்கு சீடர்களிருந்தனர். அச்சீடருக்கு அவர் தியானம் முதலியவற்றைக் கற்பித்திருந்தனர். சீடர்கள் குருவுக்கும் தங்களுக்கும் ஆகவேண்டிய ஆகாராதிகளை தயார் செய்த பிறகு நிஷ்டையிலிருப்பது வழக்கம். அவர்கள் நிஷ்டைக்கு அமருமுன் அவர்களோடு ஆசிரமத்திலிருந்த பூனையை ஒரு கூடைகொண்டு மூடிவைக்க வேண்டும் என்பது குருவின் கட்டளை. சீடர்களோ குருவாக்கே திருவாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகக் கொண்ட உத்தமர்கள். ஆகவே பூனையை மூடி வைக்க வேண்டும் என்பதைப் பற்றித் திரும்பவுங்குரு தங்களுக்குச் சொல்லா முறையில், சீடர்கள் தவறுமற் செய்து வந்தார்கள்.

குருவும் பல வருடங்களுக்குப் பின் தன் சீடர்கட்கு அநேக உபதேசங்கள் செய்து அவைகளை வழுவ விடாமல் செவ்வனே செய்து வரும்படி கட்டளையிட்டு மாண்டனர். சீடர்கள் தத்தமது தேசங்கட்கு தாம் கற்றவைகளோடு சென்றனர். அவர்கள் கற்றவைகளில் நிஷ்டைக்கு முன் பூனையை கூடைகொண்டு மூடிவைக்க வேண்டும் என்பதும் ஒன்று. அதையும் விடாமற் செய்து வந்தனர். தங்கள் வீட்டில் பூனை இல்லாவிட்டாலும் அயல் வீட்டார் பூனையையாகிலும் பிடித்து வந்து அச்சமயத்தில் மூடிவைக்க மறந்தார்களில்லை. ஆனால் அப்பிராணியை மூடிவைக்க வேண்டும் என்பதற்கு காரணம் அறியார். குரு அவ்விதம் கட்டளையிட்ட போழ்து "அப்பா குழந்தைகளே! நீங்கள் நிஷ்டைக்கு ஆரம்பிக்கு முன்பு பூனையைக் கூடைகொண்டு மூடிவையுங்கள். இல்லாவிடில் நாம் கண் மூடி நிஷ்டையிலிருக்க நீங்கள் தயாரித்த ஆகாராதிகளையும் பாலையும் அது சாப்பிட்டு விடும்" என்று விளக்கிக் கூறுமற் போனதால் ஏற்பட்ட தவறுதலிது. சீடர்கட்கு இக்காரணம் தெரிந்திருந்தால் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டிருப்பார்கள்.

இவ்விதமாகக் காலநிலைக்கும், சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமாக ஏற்படுத்திய அந்நேரம் இன்னும் கிரியை "சடங்கு" என்னும் போர்வையுடன் உலகில் நிலவி வருகின்றன. உதாரணமாக இறந்த பின் பிரேதத்தை குழியில் வைத்து மண்ணினால் மூடிய பின் இறந்தவரின் மிக நெருங்கிய சுற்றத்தாரைக்கொண்டு அக்குழியை மூன்று முறை வலம் வரச் செய்து கையில் ஒரு கொள்ளிக் கட்டையைத் தந்து மண்ணில் நொழுந்தச்செய்கின்றது "வழக்கம்." இது உண்மையில் தகனஞ் செய்யப்படும் பிரேதங்கட்கென ஏற்படுத்தப்பட்டதென்பதாகச் சந்தேகமின்றிக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு வழி! அதுவே வழி!

— மீராபாய் —

தமிழாக்கம்: ம. சி. சிதம்பரப் பிள்ளை

தினமும் நீராடினால் திடமாக ஆண்டவனை உணரலாமென்றால்- அதிசீக்கிரம் நான் ஒரு முதலையாக மாறிவிடலாம்; கிழங்குகளையும் பழங்களையும் தின்று பரமபதியை உணரலாமென்றால் - நான் ஒரு வெள்ளாடாக மாறிவிடலாம்; உருத்திராட்ச மணிகளை எண்ணி தெய்வ உணர்வு பெறலாமென்றால் - உண்மையில் மலையன்ன பெரிய மணிகளை எண்ணிவிடலாம்;

கற்சிலைகளுக்கு முன் தலைகுனிவதால் கடவுளைக் காணலாமென்றால் - ஒரு கருங்கல் மலையைக் காதலோடு கைகூப்பலாம்; பாலைப் பருகுவதனால் பரமபதியைப் பார்க்கலாமென்றால் – எத்தனையோ கன்றுக்குட்டிகளும் குழந்தைகளும் இறைவனைக் கண்டிருப்பார்கள்; ஒருவன் தன் மனைவியைத் துறந்தால் தெய்வத்தைக் காணலாமென்றால் ஆயிரக்கணக்கான ஆண்கள் அலியாகிவிடுவார்கள். தெய்வத்தை அறிவதற்கு மீராபாய்க்குத் தெரிந்த வழி – ஒரேவழி அன்புவழி.

(ஒருயோகியின் சுயசரிதை – ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ச யோகானந்தாவின் நூலிலிருந்து—)

---

ஆனால் இன்னும் இச்சடங்கு அனுவசியமாகச் செய்யப்பட்டே வருகின்றது. இன்னும் மூன்றாம் நாள் பால் தெளித்தல் எனக்கூறி பிரேதக் குழியின்மேல் மண்ணினால் ஒரு சிறு மனித உருவம் செய்து அதன்பேரில் எண்ணெய், வாசனைத் திரவியங்கள் முதலியனவற்றைத் தெளித்து, குழியில் ஒரு சிறு துவாரமிட்டு பாலை அதன் வழியாக ஊற்றுவதும் ஒரு முக்கியமான 'சடங்கு.' இதுவும் தகனஞ் செய்யப்பட்ட பிரேதத்தின் சாம்பல், அஸ்தி முதலிய வகைகளை மரியாதையாகப் பாலினால் கழுவி பலபேரும் நடமாடும் இடங்களில் எறிந்து விடுவதைவிட நதியிலோ, அல்லது கடலிலோ விடுவது மேலெனஏற்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சிந்தனை

— ஸ்ரீ கங்காதரன் அரவிந்தாச்சிரமம் - புதுவை —

## பரம்பொருள் தரிசனம்

வெறும் யூகமோ, நம்பிக்கையோ, பண்படாத மனத்தின் பாவனையோ சமயவாதிகள் பாமரர்களை ஏமாற்றுவதற்காகச் செய்த சூழ்நிலையோ அநாதியான வேத மந்திரங்களில் அருளப்பட்டுள்ள வெறும் சொல் அன்று.

நாம் புலனறிவால் உணரப்படும் ஸ்தூலப் பொருள்களைவிட இன்னும் ஸ்தூலமாகவும் தெளிவாகவும் பிரத்தியட்சமாகவும் சந்தேகத்திற்கு இடம் சிறிதுமின்றி ஆழ்ந்த ஆத்மானுபூதியின் மூலம் உணரக்கூடிய அனுபவப் பொருளாகும். மனிதகுலம் சாதித்த சாதனைகள் அனைத்தினுள்ளும் மகத்தானதும் தன்னிகரில்லாத் தனிப்பெரும் சிறப்பினையுடையதும் பரம்பொருள் தரிசனமேயாகும்.

வாழ்வின் உண்மையையும் மரணத்தின் ரகசியத்தையும் உணரச் செய்து வாழ்வின் கேள்விகளுக்கு விடைகண்டு வாழ்வின் சிக்கலான முடிச்சுகளை அவிழ்த்து கொந்தளித்து குமுறும் வாழ்க்கைப் போராட்டங்களின் மூலகாரணத்தை உணரச் செய்து நிரந்தரப் பேரானந்தப் பெருங்களிப்பில் திளைக்கச் செய்வது பரம்பொருள் தரிசனமேயாகும்.

எல்லாவிதமான யோகசாதனைகளும் ஆத்மீக நியமங்களும் முடிவுற்று நிச்சலன மோனம் சித்திக்கும்போதே அகண்டாத்மனாய் ஏகனாய் சர்வ வியாபியாய் சர்வாந்தர்யாமியாய் அனைத்திற்கும் ஆதாரமும் ஆதேயமுமாய் முக்காலங்களிலுமுள்ள நிலையான சத்துப்பொருளான பரம்பொருளை சாட்சாத்கரிக்க முடியும். இதுவே யோகானுபவங்களின் மகோன்னத சிகரமாகும். சர்வம் வாசுதேவமயம் என்று உணர்ந்த உண்மை ஞானி கிடைப்பதற்கரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரிற் சிறந்தோன். உலகம் போற்றி வழிபட்டு பின் பற்றத்தக்க ஆசான் அவனே.

கடவுள் என்றால் என்ன?

ஆதியும் அந்தமும் இல்லாததும் அநாதியானதும் நாமரூப பேதங்கள் ஏதும் இல்லாத போதிலும் நாம் காணும் நாமரூப பேதங்களையுடைய தோற்றங்கள் அனைத்துமாக ஆனதுவும்,

அங்கிங் கெனாதபடி எங்கும் நீக்கமறநிறைந்து இயங்குவதுவும் அண்ட புவனசராசரங்கள் அனைத்துமாக விரிந்து இயங்குவதுவும் அநாதியான வேதமந்திரங்களும் சாதனமான சமயங்களும் பவித்திரியான தத்துவ தரிசனபோதங்களும் அமரத்துவம் அளிக்கும் ஆத்மானுபவப் பேருண்மைகளும் தோன்றுவதற்கு மூலகாரணமாக இருப்பதுவும் ஒளிக்கெல்லாம் ஒளியாக அறிவுக்கெல்லாம் ஊற்றாக அஞ்ஞான இருளுக்கப்பால் மெய்ஞ்ஞான சொரூபமாய் இருக்கக்கூடியதும் மனாதீதத் துரியநிலையில் உணரக்கூடியதும் சிருஷ்டி திதி சம்ஹாரமாகிய முத்தொழிலையும் சத்து சித்து ஆனந்த உணர்வு நிலைகளையும் தன்னகத்தேயுடையதும் அதைக் கண்டாரை விழுங்கித் தானாக்கிக்கொள்ளக்கூடியதும் பழமைகளுக்கெல்லாம் மிகப்பழமையாகவும் புதுமைகளுக்கெல்லாம் மிக்ப் புதுமையாகவும் சாஸ்வத இளமையோடு இருக்ககூடியதும்,

இவ் விஸ்வப் பிரபஞ்சம் போன்று பலகோடி பிரபஞ்சங்களை தன் இச்சக்தியினாலேயே ஒரு நொடியில் சிருஷ்டிக்கக் கூடிய பேராற்றலுடையதும் தன்னின்று தோன்றிய இவ்விஸ்வபிரபஞ்சம் முழுவதும் அழியினும் எவ்வித மாற்றமும் மறைவும் அசைவு மின்றி தன்பூரணத் தன்மையை இழக்காமல் இருக்கக் கூடியதும்,

பலகோடி யுகங்களுக்கு முன்பும், பலகோடி யுகங்களுக்கு பின்பும் மகா பிரளயங்களுக்கும் ஊழிகளுக்கும் முடிவிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித மாற்றமும் இன்றி தன்னிலையில் தானாய் இருக்கக் கூடியதுமான பரிபூர்ணானந்தப் பரம்பொருளையே சமயங் கடவுளெனப் போற்றி வழிபட்டு பிறவித்தளையினின்றும் விடுபட்டு மீண்டும் பிறந்திளைத்து மோக்ஷமெனும் பரசாந்த மோனப் பெருநிலையை அடைய முயல்கின்றன.

## கடவுளிருக்கும் இடம் யாது?

பரம்பொருள் சிருஷ்டிக்கு அப்பால் எங்கோ வெகு தூரத்திலுள்ள ஒரு பொருளன்று. நாம் காண்பனவெல்லாம் அதனுடைய திருவுருவங்களே. நாம் கேட்பனவெல்லாம் அதனின்றும் எழும்பிய அருளொலிகளே. நாம் முகர்வன சுவைப்பன பரிசிப்பன வெல்லாம் அதனின்றும் தோன்றியவைகளே. கடலில் அலைகள் தோன்றி அதிலேயே இயங்கி மீண்டும் கடலிலேயே ஒன்றிக்கலப்பதே போல யாவும் பரம் பொருளினின்றே தோன்றி பரம் பொருளில் இயங்கி முடிவில் பரம்பொருளிலேயே ஒடுங்கி லயமாகுகின்றன. இதையே யாவும் ஆனந்தத்தில், தோன்றி ஆனந்தத்திலியங்கி ஆனந்தத்திலொடுங்குகின்றன என்று பவித்திரியான உபநிடதங்கள் அருளுகின்றன.

எல்லாம் பரம்பொருளே பரம்பொருளே.

---

## கொடை

பண்டிகைகளின் நோக்கம் கொடைத்தன்மையை வெளிப்படுத்துவதேயாகும்; சுற்றத்தாரிடமும், நண்பர்களிடமும் நமக்குள்ள அன்பையும், நல்லெண்ணத்தையும் விளக்கிக்காட்டி, மனம் விட்டு நல்லுறவை வளர்த்துக் கொள்வதேயாகும். அத்துடன் புது நண்பர்களை ஏற்படுத்திக் கொண்டு, உலகத்தில் அன்பு மதத்தை வளரச் செய்வதும் தான் பண்டிகை கொண்டாடுவதன் நோக்கம். ஏழைக்கு அன்னமிட்டு, ஆறுதல் கூறி அன்பு மரம் வளர்க்கப் பண்டிகைகள் ஒருவித வழி; செல்வந்தர்களும், வசதியுள்ளவர்களும் ஒரு முடிவு செய்துகொள்ளட்டும்; வேண்டிய பண்டிகைகள் ஒவ்வொன்றின் போதும், அக்கம் பக்கத்திலுள்ள ஏழைகள் அனைவருக்கும் மனநிறைவுடன் விருந்து செய்து பேணுதல் என்ற முடிவு எடுத்துக்கொள்ளட்டும். ஏழைகளுக்குப் பணக்காரன் மீதுள்ள வெறுப்பும் பணக்காரனுக்கு ஏழை மீதுள்ள இழிவும் எவ்வளவு விரைவாக மறைந்துவிடக்கூடும்.

—இராமதாசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

தொகுப்பு: சு. தி. சுப்பிரமணியம்
''வேதாந்தி'' பருத்தித்துறை

## தியானம் என்றால் என்ன?

ஆணவ மூலப்பும் மாயையின் மறைப்பும் அற்ற சிந்தனைகள் ஒய்ந்த, தன்னையும் மறந்த, துக்கம்-கனவு - மயக்கம் அற்ற, தூய விழிப்பு உணர்வுநிலை.

## இந்நிலையை எவ்வாறு எய்தலாம்?

சரியான ஒழுங்கான தியான சாதனைமூலம் சிந்தனை, மயக்கம், துக்கம், கனவு ஆகிய நிலைகளைக்கடந்த துரியாத்த நிலையில் ஆன்ம விழிப்புணர்வு எய்தலாம்.

## இதன் பயன் என்ன?

மன உடல் ஆரோக்கியம் பேணப்படுகிறது. மூளையின் இயக்கம் அபிவிருத்தி பெற்று தரம் உயருகிறது. மனத் தூய்மை, மன அமைதி, புத்தித்தெளிவு, ஞாபகசக்தி, வாக்குத்தெளிவு, செயற்திறன் உண்டாகி வாழ்வு மலர்கிறது. வாழ்வின் நோக்கம் சிறக்கிறது.

## சிறந்த நேரம் யாது?

சூரியோதயத்துக்கு ஒரு மணி நேரம் முன்னும், தூக்கத்துக்குப் பின்னும், உணவருந்து முன்னும் தகுந்த நேரமாகும்.

## ஏற்ற இடம் எப்படி இருக்க வேண்டும்?

கூடியளவு சுத்தமான, அமைதியான நல்ல காற்றோட்டமுள்ளதாயிருத்தல் அவசியம். சமசீதோஷ்ணமுள்ள, மரங்கள் நீரோடைகளை அடுத்து உள்ள இடங்கள் மிகச் சாதகமானதாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படித் தயாராக வேண்டும்?

மல சலம் நீக்கி, பல் துலக்கி, முகம் கை கால் கழுவி சுமார் ½ போத்தல் நீர் அருந்தி, 30 நிமிடம் சென்ற பின் சுமார் 30 தடவை நாடி சுத்தி செய்து தொடங்கலாம்.

## இருக்கை எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்?

பாய், பலகை, நாற்காலி, கட்டில், தற்பைப்பாய், மான் தோல், புலித்தோல், தடித்த துணி ஏதாவதொன்றில் பூமியில் உடல் படாதபடி வசதியாக இருக்கலாம்.

## எப்படி அமர்ந்து இருக்க வேண்டும்?

முதுகையும் தலையையும் நேராக வைத்து பத்மாசனத்திலோ வச்சிராசனத்திலோ அல்லது வேறு விதமாக வசதியாக ஆனால் முதுகெலும்பும் தலையும் நேராக வைத்து இருக்க வேண்டும்.

எப்படி ஆரம்பிக்கிறோம்? மெதுவாக கண்களை மூடி மௌனமாக சும்மா இருக்கிறோம்.

## இவ்வாறு தியானத்தில் அமர்ந்திருக்கும்போது சூழலிலிருந்து வரும் ஒலிகள் காதில் விழுந்து மன அமைதியைக் குழப்பாமல் இருக்க நாம் என்ன செய்யலாம்?

ஒலிகள் எதுவானாலும் அப்படியே வந்ததுபோலப் போகவிடுகிறோம். எதுவித ஆராய்ச்சியோ, கவனிப்போ, சிந்தனையோ, ஞாபகமோ, சம்பந்தமோ கொள்வதில்லை. இப்படி மெதுவாக படிப்படியாக சும்மா இருந்து சாதனை செய்து பயிலப் பழகவேண்டும்.

## தொடர்ந்து தோன்றும் எண்ணங்களை விட்டு எப்படிச் சும்மா இருப்பது?

எண்ணங்களை இருவகையாகப் பிரிக்கலாம். இயற்கையாகத் தோன்றும் எண்ணங்கள், மற்றது மனோவிருத்தியால் செயற்கையாகத் தொடரும் எண்ணங்கள். இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத் தோன்றும் எண்ணங்களையும் கேட்கும் ஒலிகளைப் போல அப்படியே தானாக ஓய்ந்துபோகவிட்டு சும்மா (பார்த்துக் கொண்டு, சாட்சியாய்) இருக்கிறோம். ஒரு முயற்சியும் எடுப்பதில்லை. செயற்கையான எண்ணங்கள் விருத்தியாகும்போது சும்மா இருக்கும் நிலை மாறி மனம் தொழிற்படுகிறது. இந்தக் கட்டத்திலேயே நாம் மந்திரத்தின் உதவியை நாடுகிறோம். மந்திரத்தின் மூலம் மனதில் களைபிடுங்குகிறோம். மனச்சுத்தி பெறுகிறோம்.—அதாவது செயற்கையான மன எண்ண விருத்தியினின்று விடுபட்டு சும்மா இருக்கிறோம்.

தியானத்தில் உதவும் மந்திரம் எப்படிப்பட்டது? இதுவே சர்வலோக ரீதியில் சகல மதத்துக்கும் பொதுவான ஆலய மணி ஓசையாகிய ''டிங்...டொங்...'' என்னும் ஒலி. ஒலிகளுக்குள் மூலாதாரமாக முதலும் முடிவுமாயுள்ள ''ஓம்'' என்னும் ஒலியைக் கிளப்பி திரும்பவும் அந்த ஆதி மூல ஒலியிலேயே சங்கமமாகிறது. இது எங்கும் எப்போதும் உள்ள (கட-உள்) கடவுள் உடன் ஐக்கியப்படுகிறது. இந்தப் புனிதமான மனத்தூய்மை தரும் ஆலய மணி ஓசை ஆகிய மந்திர ஒலி ''டிங்...டொங்...'' ஆழ்ந்து பரந்து செல்லும் நுண் அதிர்வுடையது. மன மாசு களைய வல்ல சக்திவாய்ந்தது.

**இதனை எவ்வாறு தியானத்தின் போது பாவிக்கிறோம்? அது எவ்வாறு பயனளிக்கிறது?**

தியானத்தின் போது செயற்கையான மனோ விருத்தி எண்ணங்கள் தொடருவதை உணர்ந்த போது ''டிங்.... டொங்....'' என்னும் மந்திர ஒலியை நினைவில் கொள்ளுகிறோம். அப்போது அந்த ஒலி ஒப்ந்து, போகப் போக, ஒடுங்கி மறைந்து போவதோடு மனதில் எழுந்து தொடர்ந்த செயற்கை மனோவிருத்தி எண்ணமும் அடிவேரோடு களையப்பட்டு விடுகிறது. அங்கு அமைதி நிலவுகிறது, சாந்தி பிறக்கிறது. அப்போ அங்கு சும்மா இருக்கும் நிலை உதயமாகிறது; விழிப்புணர்வு மலர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தியானத்தில் தானாக இயற்கையாக ஏன் எண்ணங்கள் தோற்றுகின்றன? இதன் விளக்கம் யாது?**

அவை மன அழுக்குகளின் நீக்கத்தின் அறிகுறியே யாகும். முன் கேட்டு பார்த்து, சிந்தித்து ஞாபகத்தில் வைத்தவை தொடர்பாக, உணர்ச்சி வசப்பட்டவை தொடர்பாகவும் உள்ளவை.

**செயற்கையான எண்ணங்கள் மனோவிருத்தியால் தொடருவதேன்?**

ஆணவ முனைப்பும் மாயையின் மறைப்பும் காரண மாக குறுகிய நோக்கமும் கொண்டு மனதின் குறும்புத் தனத்தாலும் துள்ளலாலும் ஏற்படும் உணர்வுத் தொடர் களே இயற்கையாக மிதந்த எண்ணத்தைத் திருகி வளர விரிய வைக்கிறது.

**மந்திரம் எவ்வாறு மனத்தூய்மையை தருகிறது?**

மந்திரத்தின் உதவியால் துள்ளும் மனதின் மனோ விருத்தி ஓய்ந்து மனம் அடங்கும் போது அது சும்மா இருக்கத் தொடங்குகிறது. அப்போது மூளையிலும் நரம்பு மண்டலத்திலும் பதிந்து அடைபட்டுள்ள குப்பைகள் போன்ற பல அதிர்வு, உணர்வு ஏக்கங்கள் படிப்படியாக வெளிக்கிளம்பி பல வித எண்ண ரூபங்களாக உதிர்ந்து போகின்றன. இதனால் மனத்தூய்மை வளருகிறது.

**தியானத்தின் போது தானாக இயற்கையாக தோற்றும் எண்ணங்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பு இருக் கிறது?**

தியானத்தின் போது தானாக இயற்கையாகத் தோற்றும் எண்ணங்கள் கடலின் மேல் மட்டத்தில் தானாக இயற்கையில் வீசும் அலைகள் போன்றும், அப்போது நாம் விழிப்புணர்வு வடிவில் சும்மா (சாட்சியாக சமுத்திர அடியின் நீர் போல மௌனமாகப் பார்த்துக்கொண்டு) இருக்கிறோம், எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடி சுத்தி எப்படிச் செய்ய வேண்டும்?

தியானத்துக்கு வசதியாக உட்கார்ந்து கொண்டு தலையையும் முதுகெலும்பையும் நேராக வைத்தபடி இடது மூக்கால் சுவாசத்தை மெதுவாக நிதானமாக உள் இழுத்து அதே போல திரும்பவும் வலது மூக்கால் மெதுவாக நிதானமாக வெளிவிடுதல் வேண்டும். திரும்பவும் வெளிவிட்ட மூக்கால் இழுத்து பின் மற்ற மூக்கால் வெளிவிடுதல். இப்படியே மாறி மாறி சுமார் 10-20 தடவை செய்யலாம். மு. கு.- காற்றை உள்ளே அடக்கி வைத்திருத்தல் ஆகாது. இது முடிய கைகளை நீட்டியபடி கண்களையும் மூடி மௌனமாக ஆழ்ந்த அமைதியையும் சாந்தியையும் நாடி தியானம் செய்யலாம். சுமார் 15-30 நிமிடம் செல்ல திரும்பவும் கண்களை மூடியபடியே வலது கைப்பெருவிரலும் சின்ன விரலும் கொண்டு முதலில் செய்த முறைப்படி நாடி சுத்தி செய்து கொள்வது புத்துணர்வும் புத்துயிரும் புத்தொளியும் புதுத்தெம்பும் விழிப்புணர்வும் மலர உதவுகிறது.

## நாடி சுத்தியின் பயன் என்ன?

மன உடல் அழுக்கு பலவீனம் காரணமாக தூக்கம், மந்தம் சோர்வு நீங்கவும், பிராணாயாமத்தால் பிராண சக்தி பிரகாசித்து விழிப்புணர்வு உதயமாகவும் உதவுகிறது. இந்த சக்தி கண்மூடி மௌனமாக சும்மா இருப்பவரிடம் சுடர் விடுகிறது. விளக்கு வெளிச்சத்தை சுற்றி அதில் விழுந்து மாளும் ஈசல்கள் போல தியானத்தில் தானாக இயற்கையாகத் தோன்றும் எண்ணங்கள் அந்த பிராண சக்தியாகிய ஆத்மஜோதியில் விழுந்து எரிந்து போகிறது. இது ஒருவர் உடலால் அனுபவித்துத் தீர்க்கப்படவேண்டிய கரும பந்தச் சுமைகளை குறைக்க ஏதுவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியானத்துக்கு உறுதுணையானவை யாவை?

இயற்கை வைத்திய ரீதியில் உணவின் குணம், அளவு, நேரம், அறிந்து அவரவர் உடல்நிலை தொழில் வயதைப் பொறுத்து அருந்துவதும் சில யோகாசனப் பயிற்சியும் (குறைந்தது சர்வாங்காசனம், சர்வாசனம், மயூராசனம், அர்த்தமந்திரேந்திராசனம், சவாசனம், முதலிலும் முடிவிலும் பத்மாசனத்திலிருந்து நாடி சுத்தி 30 தடவைவரையும் போதுமானது) இதனால் தியானபலன் இலகுவாக, அதிகமாக, குறுகிய காலத்தில் எட்டுகிறது.

## மந்திரத்தின் மதிப்பையும் உபயோகத்தையும் எதற்கு ஒப்பிடலாம்?

சிற்பியின் உளிபோலவும், நீரில் நீந்துபவருக்கு ஒரு தெப்பம் போலவும், இருட்டில் நடப்பவனுக்கு ஒரு தடி அல்லது டோர்ச்லையிற் வெளிச்சம் போலவும், பிணம் எரிக்கும்போது பாவிக்கும் ஒரு தடி போலவும் தியானத்தின்போது உதவும் மந்திரத்தை ஒப்பிடலாம். மந்திரத்துக்கு வேறு அர்த்தமோ உபயோகமோ இல்லை எனலாம்.

## எவ்வளவு நேரம் தியானம் செய்யலாம்?

காலையிலும் முடிந்தால் மாலையிலும் ஆக இருதடவை ஈடுபடலாம். சுமார் 15-30 நிமிடம் போதுமானது. அதற்கு மேல் செய்யத் தேவையில்லை. இந்த வித தியானம் இதற்கு மேல் இல்லறத்தவர் செய்யவும் கூடாது.

## எப்படி முடிக்கிறோம்?

நேர உத்தேசம் நினைவில் வந்ததும் சுமார் 20 மூச்சு —நாடி சுத்தி செய்து மெதுவாகக் கண்களைத் திறந்து, மெதுவாக எழுந்து, மெதுவாக நடந்து சென்று நிதானமாகக் கடமைகளில் ஈடுபடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரின் உணவு
# மாமிசமா மரக்கறியா?

மாத்தளை — அருணேசர்

(வைகாசி இதழின் தொடர்ச்சி)

இன்னும் கேளும்: இவ்வுலக உயிரினங்கள் அனைத்தும் மரக்கறி உணவுகளை அடியோடு நீக்கி மாமிச உணவை மாத்திரம் உண்டு உயிர்வாழ முடியுமோ? சிறிதும் முடியாதன்றோ? ஆனால், மாமிச உணவை அடியோடே நீக்கி மரக்கறி உணவை மாத்திரமே எந்நாளும் உண்டு உயிர் வாழ்தல் எவருக்கும் முடியும் என்பதை நீர் ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது.

இவ்வுலகத்தில் மரக்கறி உணவை மாத்திரம் உண்டு உயிர் வாழ்பவர் எல்லா நாடுகளிலும் இருக்கின்றனர். விலங்கினங்களும் ஏராளமாயிருக்கின்றன. மாமிச உணவை உண்பவரோ எனின், மரக்கறி உணவின் உதவியின்றி வெறும் மாமிசத்தை மட்டும் உண்பாராய்க் காணப்படவில்லை. அவர்களெல்லாம் பெரும்பாலும் மரக்கறி உணவுகள் கொண்டு மிகச் சிறுபான்மையே புலாலுணவுகள் கலந்து உண்கின்றனர். ஆகையால் மரக்கறி உணவுகளே மனிதருக்கு இயற்கை உணவாகும் என்பது புலனாவதை அறிவீர்.

இவ்வளவிருந்தும், சிலர் அறியாத்தன்மையுடன் மனிதனுக்கு இயற்கை உணவு மாமிசந்தான் என்றும், மனிதன் மாமிசமுண்ணும் இனத்தைச் சேர்ந்தவன்தானென்றும் பிதற்றுகிறார்கள். சில காட்டுமிராண்டிகளுக்கு காட்டு விலங்குகளின் மாமிசம் வேண்டிய பட்டும் கிடையாத பொழுது நரமாமிச பட்சணிகளாய், அதாவது மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு மனிதனைத் தின்பவர்களாய் ஆகிவிடுகிறார்கள். இவ்வித மிலேச்சர்களது வாடிக்கையால் மனிதனுக்கு மனித மாமிசந்தான் இயற்கை உணவெனச் சொல்லிவிடலாமோ?

ஆஸ்திரேலிய நாட்டுப் பழைய குடிகள் அருவருக்கத்தக்க புழுக்களையும் ஊர்வனவற்றையும் தின்கின்றனர். இந்தியாவில் மலைகளிலுள்ள ஒருவகைப் பழங்குடிகள் நச்சுப்பாம்புகளை அதிக ஆசையுடன் தின்கின்றார்கள். இதனால் அவ்வுணவு மனிதனுக்கு இயற்கையானதெனச் சொல்வோமா? தக்கபடி பாகஞ் செய்துவிட்டால் மனிதன் எதையுந் தின்னலாம். இதனால் பன்றிபோல எதையுந் தின்னக்கூடியவனெனச் சொல்வது முறையோ? எங்கோ ஓர் ஊரில் பசுக்கள் மீன் கழிவைத் தின்கின்றன என்பதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்ததைப் பார்த்தோம். மாட்டிறைச்சியைத் தின்ன குதிரைகளைப் பழக்கலாம். குரங்குகள் கோப்பி, தேனீர், சாராயம் இவைகளைக் குடிக்கப் பழகுகின்றன. இவ்வாறு மனிதன் தானாக உண்டு பண்ணிக்கொண்ட வாடிக்கையை ஆதாரமாகக் கொண்டு அவன் தன்னை இறைச்சி தின்பதற்குப் பிறந்தவனென்று தர்க்கமாடலாமோ?

பருந்தும், கழுகும், நாயும், பூனையும், புலியும், செந்நாயும் ஆகிய உயிரினங்கள் எவ்வளவு நாற்றமுடையனவாயினும், புழு நெளிந்து ஊர்வனவாயும் அருவருப்பான தோற்றமுடையனவாயும் கெட்டுக்கிடக்கும் மாமிசத் துண்டங்களைக் கண்டவுடன் அதி ஆவலாய் விரைந்தோடி சற்றும் அருவருப்பின்றி மகிழ்ச்சியுடன் உண்கின்றன.

மனிதனோ தான் மாமிசம் தின்கிற சாதி என்று தன்னைச் சொல்லிக் கொண்டாலும் மேற்குறித்த பருந்து முதலியவற்றைப்போல கெட்ட அல்லது அழுகி நாற்றமெடுத்த மாமிசத்தையும், மற்றெவ்வித மாமிசங்களையும் தொடாவாவது, முகரவாவது, அவற்றின் நாற்றத்தைச் சகிக்கவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது, அவைகளில் நெளியும் புழு முதலியவைகளைப் பார்த்து மகிழவாவது செய்கின்றனா? இல்லையே.

அவ்வண்ணமிருக்க, மனிதன் தன்னை எப்படி மாமிசம் தின்னும் இனத்தவனென்று சொல்லலாம்? பாம்பு, பல்லி, நாய் முதலானவை செத்து நாறிக்கிடந்தால் "அப்பப்பா! பிணநாற்றம்!" என்று மூக்கைப் பிடிக்கின்றான். இதிலிருந்து அவன் தன்னை மாமிசம் தின்னும் சாதியானல்லன் என்பதைத் தானாகவே தெரிந்து கொள்ளலாம். நாய் புலி முதலியன அப்படி அசங்கிதப்படவில்லையாதலால் அவைகளையே ஒருவாறு மாமிச முண்ணுஞ் சாதி என்று சொல்லவேண்டும்.

"நாயினுக்கும் பேயினுக்கும் நரியினுக்கும் கழுகினுக்கும்
ஈயினுக்கும் இனிதுபிண மெனிலதுதா னினியதுவோர்
வாயினுக்கும் மனத்தினுக்கும் மதிப்பரிய மாதேவன்
றேயினுக்கே சிவமதனைத் தினைப்பாரே சிறந்தாரே"

(சிவதருமோத்தரம்)

"நாய் கழுகு கூகை நரி காகம் ஈ யெறும்பு
பேயிவைக ளாவியிரிந்து தழு—னேயமொடு
தானருந்த லல்லாது சற்காரிய மனிதர்
தானருந்த லாவா தோதான்"

(புலால் மறுத்தல்)

என்ற செய்யுள்களாலும், மனிதன் மாமிசமுண்ணும் சாதியினனல்லனென்றும், நாய், நரி, சிங்கம், புலி, கழுகு முதலியனவே மாமிச முண்ணும் சாதிஎன்றும் அறியலாம். புலி சிங்கங்கள் தம்மைதாமேயாவது, அல்லது ஓநாய், நரி, கரடி போன்ற மாமிசமுண்பனவற்றையாவது ஏன் இரையாகக் கொள்வதில்லை? எதற்காக ஆடு, மாடு, கோழி, மான், யானை, காண்டாமிருகம் இவைகளையே தேடுகின்றன?

இதனை ஆராயும்போது "எந்த மாமிசமுண்ணும் இனமும் தாவர உணவைத்தான் ருசித்து உணவிற்குத் தேடிக்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய் கிழங்கு தானியம் இலை செடி கொடிகளைத்தின்று கொழுத்த விலங்குகளை உண்ண விரும்புவது இயற்கை உணர்ச்சியின் தூண்டுதலாலேயே'' என்ற உண்மையைக் காணலாம்.

இங்ஙனம், மனிதன் மாமிசமுண்ணும் இனத்தவனல்லன் என்னும் முடிவினால், அவன் உடம்புக்கு மாமிசம் பொருத்தமான உணவாகாது என்பதும் விளக்கமாகும்.

## (2) மாமிச உணவு உடல் நலத்தைக் கெடுக்கிறது என்பதற்கு விளக்கம்

மாமிசத்தை உண்பதால் விலங்கினங்களினிடமுள்ள பற்பல நோய்களும் (இவை 86 வீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது) உண்பவர்களுடைய உடலில் பரவி அவர்களை நோயாளர்களாக்கி ஆயுளையும் குறைத்துச் சடுதியில் சாகப்பண்ணுகிறது. மாமிசத்தைச் சமைக்காமல் பச்சையாகத் தின்றால் அது உடம்பிலிருந்து கொண்டு அழுகி நோயுண்டாவதற்குக் காரணமாவதால்தான் அதனை சமையல் பண்ணி உண்கிறார்கள். மாமிசத்தைச் சமைத்தும் நெடுநேரம் வைத்திருந்தால் அது பழுதாகுமென்று காரமுள்ள சரக்குகளைச் சேர்த்துச் சமைக்கிறார்கள்.

எப்படிச் செய்தாலும் மாமிசம் தீமை தரக்கூடியது தான். அதன் தீமை உடனே தெரியாவிட்டாலும் பின்பாவது தெரியவரும். வெள்ளைப் பாஷாணம், காஞ்சிரங்கொட்டை முதலானவை நஞ்சுகளென்றாலும் அவைகளைச் சிறிது சிறிதாகச் சாப்பிடுகிறவர்களுக்கு உடனுக்குடன் யாதும் தீங்குண்டாவது காணோம்; நாளடைவில்தான் அவைகள் பலவித தொந்தரவுகளை உண்டாக்குகின்றன. இவைகளைப் போலவே தான் மாமிசமும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி

கா. கு. சண்முகம்
கோவை மாவட்டம்

இவ்வுலகம் ஒரு ஒழுங்கான வழியில் சென்று கொண்டிருக்கிறது 'பிரபஞ்சமானது குழப்பமான ஒன்றல்ல; ஒழுங்கான ஒன்று' என தத்துவ சாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். கிரகணங்கள் போன்ற நிகழ்ச்சிகள், நாம் எதிர்பாராமல் ஏற்படுவன அல்ல. அவையெல்லாம் ஒருகணித விதிக்கு உட்பட்டு நிகழ்ந்து வருபவை. கோளங்களைப் பற்றிய கணித விதிகள் முழுவதையும் அறிந்தால் இந்த உலகமானது எப்போது அழியும் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லி விடலாம். மக்களுடைய, இராஜ்யங்களுடைய உயர்வு தாழ்வும் கோளங்களின் சுழற்சியால் பாதிக்கப் படுவதாகக் கணிதநூல் கூறுகிறது.

விதி என்பது இதை அனுசரித்த ஒரு சட்டமே ஆகும். ஒரு மனிதன் முந்திய பிறவிகளில் இன்னின்ன செயல்களைச் செய்கின்றான் என்பதற்கேற்ப அவனுடைய தற்போதைய வாழ்க்கை அமைகிறது. இதையே விதி எனலாம். நன்மை செய்தால் நீ நன்மை அடைவாய்; தீமைசெய்தால் துன்பத்தை அடைவாய். இது இயற்கையின் விதி. இதையே 'ஊழ்' என்றும் சொல்கிறோம். மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிறவிகள் உள்ளனவாக ஒப்புக் கொண்டால் தான் விதியையும் நன்கு புரிந்துகொள்ள முடியும். ஏனென்றால் ஒருவன், தான் செய்த நல்வினை, தீவினைகளின் பயனை அப்பிறவியிலேயே அடைவதும் உண்டு; அல்லது அடுத்த பிறவிகளில் அடைவதும் உண்டு. சிலப்பதிகாரத்தில் ஆசிரியர் ''ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டுதும்'' என்ற தத்துவத்தை வைத்துக் கொண்டு கோவலன் கதையை எழுதுகிறார். கோவலனுக்கு ஏற்பட்ட விதி அநியாயமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண தண்டனை, அவன் முந்திய பிறவியில் செய்த அதே மாதிரியான தீவினையின் பயனால் ஏற்பட்டது என்று எடுத்துக் காட்டுகிறார்.

விதி உண்டு என்பதற்காக மதிக்கும் வேலை கொடுக்காது முயற்சி செய்யாமல் சோம்பி இருக்கவேண்டும் என்று யாரும் கூறவில்லை. "விதியையும் மதியால் வெல்லலாம்". என்றுதான் சொல்லியுள்ளார்கள். "ஊழிற் பெருவலியாவுள? என்று வினவிய வள்ளுவரே, "ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்தாழாது உஞற்றுபவர்" எனவும் சொல்லவில்லையா?

சோம்பல் என்பது ஒருவனுக்கு இயற்கையாக இருந்தாலொழிய விதியைச் சொல்லிக்கொண்டு யாரும் வேலை செய்யாதிரார். முயற்சியால் நாம் நினைக்கிற எல்லாக் காரியங்களையும் செய்து முடித்து விடமுடியாது. முயன்றாலும் செய்து முடிக்க இயலாதவற்றைத்தான் விதி என்கின்றோம். விதி என்பது காரணம். விதியின் பயன் என்பது காரியம். காரணம் இன்றேல் காரியம் இல்லை. அதை யொட்டியே விதியில்லாமல் எக்காரியமும் நடக்காது என்கிறார்கள்.

ஒருவன் பணக்காரனாகவும், இன்னொருவன் ஏழையாகவும் இருக்கிறான். பணக்காரன் பணக்காரனாகத்தான் இருக்க வேண்டும், ஏழை ஏழையாகத்தான் இருக்க வேண்டும் என்று விதி சொல்வதில்லை. பணக்காரன் ஏழையாகலாம்; ஏழை பணக்காரன் ஆகலாம். அல்லது ஏழை பணக்காரன் என்ற வேற்றுமை நீங்கி இருவரும் சமமாகலாம். விதி இவற்றையெல்லாம் தடுப்பதில்லை.

விதி உலகத்தில் பிறந்த உயிர்களுக்கு நீதியை வழங்குகிறது. எவ்வாறெனில் உலகத்தில் பிறந்த எல்லா மனிதர்களும் சமம் ஆவதில்லை. ஒருவன் பலசாலியாக இருக்கிறான். இன்னொருவன் பலஹீனனாக இருக்கிறான். ஒருவன் அறிவுடையவனாக இருக்கிறான். இன்னொருவன் அறிவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தவனாக இருக்கிறான். ஒருவன் நீண்டகாலம் வாழ்கிறான். இன்னொருவன் இளமையிலேயே இறந்துவிடுகிறான். ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசத்தை ஒழித்துவிட முடியும் என்றாலும், சுகம், துக்கம் என்ற அனுபவத்தில் எல்லாரும் சமநிறை பெறமுடியாது. ஒருவனுக்கு ஒரு பிறப்பு மட்டும் உண்டானால் இயற்கையான பாரபட்சம் உடையதெனக் கருதவேண்டியிருக்கிறது. இயற்கை அல்லது கடவுள் பாரபட்சமுடையதாக இருக்க முடியுமா? முடியாது! ஆகவே ஒரு மனிதன் பல பிறவிகள் பிறந்து இறுதியில் இன்ப துன்ப அனுபவத்தில் மற்றையோருக்குச் சமமாகிறான் என்று அனுமானிக்கவேண்டியிருக்கிறது. விதியைப்பற்றி எமர்சன் கூறுவது இங்கு கவனிக்கத் தக்கது.

“விதி மிகக் கொடியது. பயங்கரமானது. விதியின் கருணையற்ற உள்ளத்தை மறைக்கமுடியாது. இது உண்மை. இதுவே உண்மை. விதியின் கொடிய தன்மை நம் குணத்தையே சிதைத்துவிடுகிறது. நமது முதுகெலும்பிலும், பட்சியின் மூக்கிலும், பாம்பின் தலையிலும் விதியின் விஷம் பரவிக்கிடக்கிறது. இதேபோல்தான் சமூக அளவும், மன நிலையளவும், காதல் நிலையும் ஆகும். சிருஷ்டி சக்திகள் ஒன்றோடொன்று மோதிச் சிறைப்பட்டுச் சிதறி வருவதும் விதியின் வழிதான். நாம் அன்றாடம் நம் வாழ்க்கையில் விதியை எதிர்த்துப் போராடுகிறோம். விதியும் நம்மை எதிர்த்துப் போராடுகிறது. நாம் கொடிய மிருகம்போல் எதிர்த்தால், விதியும் மிகக் கொடிய மிருகம் போல் நம்முடைய செயலை எதிர்த்துத் தடைசெய்கிறது. நாம் நயமான முறையில் எதிர்த்தால், விதியும் கூர்மையான முறையில் நம்மை உடனே தாக்குகிறது. ஆத்மா வளர வளர தடைகள் உயர்ந்த நிலையில் வந்து விடுகின்றன. ஆனால் வெற்றி தோல்வி நம் முயற்சியையும் தைரியத்தையும் பொறுத்திருக்கின்றன. விதி என்பது இயற்கையில் பல மாற்ற முடியாத சட்ட திட்டங்களின் தொகுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமதருமம் போதித்த வீரசைவர்

(ம. நமசிவாயம்)

''வறுமை என்பது மனிதனுக்கு கடவுளின் சீற்றத்தால் ஏற்பட்ட ஒரு தாழ்ந்த நிலையென்றோ, பாபம் செய்து சம்பாதித்துக் கொண்ட துரதிஷ்டம் என்றோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது ஒரு சமுதாயச் சீர்கேடு. அதனை முற்றாக நீக்கி விடுவது அத்தியாவசியமாகும்!''

இவ்வாறு சமயங்களும் சமய ஸ்தாபனங்களும் வறுமையைப்பற்றிப் பெரிதும் சிந்திக்காத 12-ம் நூற்றாண்டிலேயே அனைவருக்கும் எடுத்துரைத்து அறிவு புகட்டியவர் மாபெரும் வீரசைவ லிங்காயத மதத்தலைவராகிய பசவேஸ்வரர் ஆவர்.

பொருளாதாரச் சமத்துவத்தை மட்டும் பசவேஸ்வரர் வலியுறுத்தவில்லை. சமூக ஏற்றத்தாழ்வுக்கு மூலகாரணமாகிய பரம்பரைத் தொழில் முறையையும் அவர் கண்டித்துள்ளார். தொழில்களை மனிதர் சுதந்திரமாகத் தமது சொந்த விருப்பத்துடன் தெரிவு செய்ய வேண்டும். தந்தை செய்த தொழில் மைந்தனது விருப்பமின்றி அவன்மீது சுமத்தப்பட வேண்டியதில்லை. இக்கொள்கையை வலியுறுத்த அவர் கூறியதாவது:-

''ஒரு மனிதன் இரும்பை நெருப்பில் பழுக்கக் காய்ச்சித் தொழில்புரிவதால் கொல்லனாகவும், துணிகளைச் சலவை செய்வதால் வண்ணானாகவும், ஆபரணங்களைச் செய்வதால் பொற்கொல்லனாகவும், வேதங்களை அத்தியயனம் செய்வதால் பிராமணனாகவும் ஆகின்றான்'' என்பதாகும்.

---

முன்தொடர்ச்சி

*விதியை ஒப்புக்கொள்வதால் மனிதனுக்குள்ள சுதந்திரத்தையும், கடமையின் சிறப்பையும், குணத்தின் ஆற்றலையும், நாம் இழிவுபடுத்த முடியாது. வாழ்க்கையில் இவைகளுக்கும் ஆழ்ந்த பொருள் உண்டு. விதியும் செயலும் உண்மையே?'' இவ்வாறு எமர்சன் கூறுகிறார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானமும் வாழ்க்கையும்

சுவாமி சின்மயானந்தா

## ஆனந்த ஊற்று

நம்மில் ஒவ்வொருவரும் ஒரே லட்சியத்தைத்தான் நாடுகிறேம்.

இந்த உலகத்திலேயே விழித்திருக்கும்போதே, கலப்பற்ற இடைவிடாத பூரணமான ஆனந்தத்தையும் அமைதியையும் தவிர நமக்கு வேண்டுவது வேறென்றுமில்லை.

ஆனல் உலகப் பொருள்கள் தரும் இன்பம் இருந்திருக்கிறதே, அதன் மினுமினுப்பு போலியானது. விரைவில் மறைந்துவிடும்.

அந்த இன்பத்தை இழந்ததும் குருட்டு மனிதன் என்ன செய்கிறன்? அதே நிலையற்ற இன்பங்களை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவதற்காக இன்னும் கடுமையாக உழைக்க ஆரம்பிக்கின்றன்!

சம்பாதிப்பது, செலவழிப்பது என்ற இந்தத் துன்பகரமான போராட்டத்தில் வியர்த்து விறுவிறுத்துப் போகும் மனிதன், ஒரு விருப்பத்தினின்றும் மற்றொரு விருப்பத்துக்குத் துரத்தப்படுகிறன். நித்திய சுகம், பரமசாந்தி என்ற சொரூபத்தை அடைய வேண்டும் என்ற பொதுவான வேகத்தினல் உந்தப்பட்ட போதிலும், அதை அடையும் வழி தெரியாமல் ஏமாற்றமடைந்து பெருமூச்சுவிட்டு ஆயிரக்கணக்கான ஏக்கங்கள் உள்ளே குமுறிக்கொண்டிருக்க, ஒருநாள் தன் உடற்கூட்டைவிட்டு அகல்கிறன். எவ்வளவு குரூரமான விளையாட்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு உயிரினுடைய அன்றுடப் போராட்டத்துக்கும் சாந்தியும் ஆனந்தமுமே குறிக்கோள் என்று சொன்னல், நீங்கள் இயல்பாகக் கேட்கக்கூடும், 'சாந்தி என்றல் என்ன'? என்று.

ஆராய்ச்சிச்சாலையில் செய்யப்படும் பரிசோதனை மூலமாகவோ அல்லது கண்கூடாகப் பார்க்கப்படும் புள்ளி விவரங்கள் மூலமாகவோ பதில்சொல்லக்கூடிய கேள்வி அல்ல இது. இது உள்ளத்தைப் பற்றிய கேள்வி. புறவுலகத் தொடர்பு கொண்டோ கொள்ளாமலோ மனிதன் தனக்குள்ளே அனுபவிக்கும் திருப்தியின் தன்மை பற்றிய அந்தரங்க விசாரணை.

சாந்தி என்பது ஒரு மனநிலை எந்த நிலையில் மனிதன் வாழும்போது ஒரு முழுமையான துயரற்ற மௌனம் தன்னுள்ளே இருப்பதை உணர்கிறன்.

ஆகவே சாந்தியைப் பற்றி விசாரணை செய்யப் புறப்படும் மனிதன், ஓரளவுக்காவது புற உலகத்தினின்று பிரிந்து நிற்கத் தெரிந்தவனாக இருக்க வேண்டும் உள்ளே நோக்கி. வெவ்வேறு மனநிலைகளில் அங்கு நிகழும் மாறுதல்களைக் கவனிக்கக் கூடியவனாக இருத்தல் வேண்டும்.

சுருங்கச் சொன்னல், சுயபரிசோதனையும் உள்ள ஆராய்ச்சியும் எல்லாத் தத்துவ விசாரணைகளுமே ஆரம்பமாகும். இந்திரியங்களைத் திருப்திப்படுத்தும் பொருள்களை மட்டுமே மதிக்கும் ஒரு மனிதனுக்குக் கவனமெல்லாம் வெளியேதான் செல்லும். உள் குழப்பம் தீராது.

இவையெல்லாம் குருட்டு நம்பிக்கைகள் அல்ல. அசல் அனுபவங்கள். வாழ்க்கையில் வெற்றியடைந்த மகான்கள் பிழையறப் பரிசோதித்து, கலப்பற்ற உண்மைகள் என்று கண்டு கொண்ட மாணிக்கங்கள். இந்தப் பேனவைப் பிடித்திருப்பவரால் பரிசோதிக்கப்பட்டுத் தங்கக்கட்டிகள் என்று உணரப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருப்பத்துக்கு முடிவில்லை

நம் ஒவ்வொருவருக்குள்ளும் எந்த ஒரு குறிப்பிட்ட விநாடியிலும் நூறு ஆசைகள் நிறைவு பெற முண்டுகின்றன. அதிர்ஷ்டக்காரர்கள் என்று நாம் கருதும் நபர்கள் விஷயத்திலும் உண்மையே. அவர்களுடைய விருப்பங்களில் ஒரு சில நிறைவேறி விட்டன போல் தோன்றினாலும், நிறைவேற நிறைவேற ஒவ்வொரு விருப்பமும் அதை ஒட்டிய புது விருப்பங்களைக் கொத்துக் கொத்தாக உற்பத்தி செய்வதைப் பார்க்கிறோம்! ஆசை நிறைவேறுவதால் கிடைப்பது அரை குறை இன்பமே. அந்த குறையை நிரப்ப மற்றோர் ஆசை உதிக்கிறது.

ஏதாவது ஒரு தனி விருப்பத்தை எடுத்துக் கொண்டு அதை ஆராய்வோம்.

'ஒரு பிள்ளை மட்டும் எனக்குப் பிறந்துவிட்டால்......' என்று ஒருவன் ஏங்குகின்றான். அவ்வளவுதான், வாழ் நாள் முழுவதும் நீடிக்கும் ஒருநீண்ட சித்திரகதைத் தொடர் அதில் ஆரம்பமாகி விட்டது.

இந்த ஆசை எப்படி எழுகிறது? எதை அவன் ஆனந்தம் என்று நினைக்கிறானோ அதை முழுமையாகத் தருவதற்கு அவனது வாழ்க்கையின் சந்தர்ப்பங்களுக்கும் வலிமை இல்லை. இந்த ஏக்கத்தை இட்டு நிரப்பி வாழ்க்கையைப் பூரணமாக்குவதற்கு, 'ஒரு மகன் தேவை,' என்ற எண்ணம் அவனுள் கொஞ்சம் கொஞ்சமாக உருப்பெறுகிறது. ஆகவே வாழ்க்கையில் இன்னும் முழுமை பெறும் பொருட்டுத் தன்னை அறியாமலேயே அவன் செய்கின்ற முயற்சிதான் இந்த விருப்பமாகும்.

மனத்தடாகத்திலே, ஒரு சின்னஞ்சிறு கலக்கமாகத் தான் இந்தப் பிள்ளைப்பித்து புறப்படுகிறது. ஆனால் பதினாயிரம் வளையங்கள் எண்ண அலைகளாக விரிந்து கரையிலே மோதுகின்றன. விருப்பமானது ஒரு முடிவில்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ண அணியை மூடுக்கி விடுகிறது. இவ்வாறு ஒவ்வொரு விருப்பத்தாலும் முடுக்கி விடப்பட்ட எண்ணங்கள், விழிப்பு உலகத்திலே செயல்களாக வெளிவிடப்படுகின்றன. அதாவது உலகத்தின் ஆசை புறவுலகத்திலே பூர்த்தியடைகிறது.

பிள்ளை வேண்டும் என்ற ஆசை கல்யாணப் பிரச்சினையைக் கிளப்பி விடுகிறது. யாரை மணப்பது? பெண்ணை எங்கே தேடுவது? எத்தகைய குணமுள்ளவளை நாடுவது? ஓய்வு கிடைக்கும் ஒவ்வொரு விஞடியும் ஆயிரக்கணக்கான ஆகாசக் கோட்டைகள் குதித்தெழ, இல்லற வாழ்க்கையில் இன்ன இன்ன சுகங்களை இன்னின்ன இன்பங்களை இன்ன இன்ன விதத்தில் அடையவேண்டும் என்று ஒவியங்கள் தீட்டப்படுகின்றன. எண்ணங்கள் விருப்பத்திற்கு விறகிட, நிலையற்றகனவு ஒவ்வொன்றும் உயிர் பெற்று உலவுகிறது. ஞறுகிய காலத்தில் குழப்பம் தொடர்ந்து கொதிக்கும் நரகத்தில் கொண்டுபோய் விடுகிறது.

எல்லாவற்றுக்கும் ஆரம்பம் ஒரே விருப்பம்! அசடனை சாதாரண மனிதன், புருவங்களை உயர்த்திக் கேட்கிறுன்: ''என்ன இருந்தாலும் சுவாமிஜி! பிள்ளை வேண்டுமென்று விரும்புவது எல்லோருக்கும் பொதுவான நெறியான இயல்பான ஆசை தானே?

சுவாமிஜியால் புன்னகைதான் செய்யமுடியும். கேட்பவன் உங்களைப் போன்ற அறிவு வேட்கை கொண்ட மனிதனுக இருந்தால் அவனுக்காக அவர் ஒரு பொருள் செறிந்த பேருரை நிகழ்த்தலாம். ஆனுல் அவ்வளவு நேரம் செவி சாய்க்க யாருக்குப் பொறுமையாயிருக்கிறது. அதுவும் பேசுகிறவர் சாலையோரத்தில் உட்கார்ந்திருக்கும் அரைப்பட்டினி மகாத்மாவாக இருக்கும் பொழுது?

தன்னுடைய எண்ணங்களால் வதைக்கப்பட்ட மனிதன், அவைகளை அதிக காலத்துக்குத் தன்னுள் அடக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்க முடியாது. விருப்பத்திலிருந்து அவை வீரியத்தைப் பெற்று அவனை அடிமையாக்கி விடுகின்றன. மணமகளைத் தேடுவதிலும் அவள் பெற்றோரைச் சந்திப்பதிலும், பேச்சுவார்த்தை நடத்துவதிலும், கொடுக்கல் வாங்கலை முடிப்பதிலும், ஊர்வலத்திலும் பின்னர் மாலை மாற்றுவதிலும் அந்த எண்ணங்கள் உருப்பெறுகின்றன. தளர்ந்த மனமும், சோர்ந்த உடலுமாக, அவனும் அச்சத்தால் அடங்கிக் கிடக்கும் அவளும் வழக்கமான படைப்புத் தொழிலிலே வேகமாக முன்னேறுகிறார்கள்.

பிள்ளை வேண்டுமென்ற விருப்பம் உள்ளுக்குள்ளே ஒரு சுழல் காற்றை உற்பத்தி செய்து, வியர்வையிலும் உதிரத்திலும் அவனை இழுத்துச் சென்று, பெற்றவன் என்ற முள் ஆசனத்திலே பிடித்துத் தள்ளி விடுகிறது.'' ஹா! என் பிள்ளை! அவன் பிறந்து விட்டான். என் செல்லப்பிள்ளை! என் சிட்டுப் பிள்ளை! என்னுடைய பிள்ளை!''

எப்பேர்ப்பட்ட ஆனந்தம் — ஆனல் ஐயோ! எத்தனை விளுடிகளுக்கு? அந்த ஆனந்தத்தை தொடர்கின்றன. புட்டிப்பாலுக்கும், டாக்டர் வீட்டுக்கும், தையற் கடைக்கும், மருத்துவ விடுதிக்கும் ஓடவேண்டிய ஓட்டம் விரைவிலே அந்த துரதிருஷ்டம் பிடித்த மனிதன் பொம்மைக் கடைக்கும் வீட்டுக்குமாக, பள்ளிக்கும் தியேட்டருக்குமாக, சிபாரிசு செய்பவர்களுக்கும் உத்தியோகம் தரக்கூடியவர்களுக்குமாக கால் தேய அலைய வேண்டியிருக்கிறது. கண்ணராவி, கண்ணராவி! ஒவ்வொரு நாளும் இன்பத்தைக் கொடுக்குமென்று எதிர்பார்த்த அந்தப் பொருள், ''என் மகன்'' ஆயிரம் ஆவல்களையும் அச்சங்களையும் திட்டங்களையும் தோல்விகளையும் ஏமாற்றங்களையும் ஏக்கங்களையும் தந்துகொண்டேயிருக்கிறன்.

''ஆயினும் அருமைசுவாமிஜி குறைந்த பட்சம் அந்தப் புனிதமான நொடியிலே என் மகன் என்ற ஆனந்தத்துடன் கூவினனே. எப்போதாவது அவன் உண்மை இன்பத்தைச் சுவைத்தான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லையா? இப்படி நீங்கள் கேட்கும் பட்சத்தில் நான் ''ஆம்'', என்று ஒப்புக்கொள்கிறேன். ஆனல் இந்த உண்மை ஆனந்தம் தற்காலிகமானது, புலன் உணர் பொருள்களிடத்திலே மேல் பூச்சாக இருப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரகவணக்கம்

சிவாகம ஞானசாகரம் N. இராமநாதசிவாச்சாரியார்—திருக்கோலக்கா

## குரு

வாசவனுர் போற்று குருவாக்குக் கொரு தலைவன்
தேசுறு பொன் போன்ற திரு மெய்யான் — மாசில்அக்க
மாலை தண்டம் குண்டிகை சின் முத்திரை கைவைத்த குண
சீலன் வியாழனென்றுதேர்.

ப்ரம்மாவின் மூன்ருவது புத்ரரான ஆங்கிர ஸருக்கும் அவர் பத்னி வஸுதாவிற்கும் தோன்றியவர் பிரஹஸ்பதி. இவருக்கு (1) ப்ருஹத்ப்ரும்மா (2) ப்ருஹன் மநஸ், (3) ப்ருஹன் மந்தர (4) ப்ருஹன்பாஸ (5) ப்ருஹத் கீர்த்தி (6) பிரஹத் ஜோதிஸ் என்ற ஆறு சகோதரர்களும் பானுமதி என்கிற சகோதரியுமுண்டு. ப்ரஹஸ்பதி தாரா என்பவளை மணந்து (1) சம்யூ (2) நிசச்யவன் (3) விச்வஜ்த் (4) விச்பபுக் (5) படபாக்னி (6) ஸ்விஷ்டக்ருத் என்ற ஆறு அக்னிகளையும் ஸ்வாஹா என்ற பெண்ணையும் உண்டு பண்ணினுர்.

பிறகு சகலகலாவல்லவரான ப்ரஹஸ்பதி ஆதிநாயகரான தோணிபுரத்து ஈசனை பிரமபுரீசனிடம் அளவிலா ப்ரேமைகொண்டு சீகாழியில் பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இறைவனை பூஜித்து பலகாலம் தவமியற்றி கொண்டு இருந்தார்.

இவ்வாறுயிர்கட்குயிராம் நெறியெங்கு மொன்ருய்ச்
செவ்வாய்த் தெளிந்தோரறியாதறி சித்தாகி
ஒவ்வாவொரு பேரொளி யென்ப வுயர்ந்த காழி
மொய்வாய் வரைமேல மருங்குரு மூர்த்தி தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கைர் முழுது நலனெடுத் தேத்த நளிதடம் படிந்து மேல்கரையில்
பொன்னவிர் கடுக்கைப் புரிசடை முதல்வன் பூசனை வரன்முறையாற்றித்
தன்னருட் குரவன் முடிப்பமுன் பரிமான்ற ருமகப் பலனுமாங் கெய்தி
ஒன்னலர்க் கடந்த முழுவுறழ் தடந்தோளொளிறுவேன் மன்னவன்
பொலிந்துந்

மஞ்சூருமை பால் வனவல்லி மணந்த கோவும்
நஞ்சூர்களத் தானடி யேவல் செய் நந்திதானும்
நெஞ்சூரருட்டேசிகனின் னேடு மூவரன்றே
தஞ்சூருல குக் குருவென்பதலத்தின் மிக்கார்.

அத்தவத்திற்கு இரங்கிய இறைவன் பிரஹஸ்பதியாம் பல வரங்கள் தந்தருளினர். நீ தேவர்களுக்கு குருவாய் இருக்கும் தன்மையும்; 'க்ரஹங்களில் ஐந்தாவதாகவும் இருக்கும் தன்மையும் அடைவாய்' என வரம் தந்தருளினர். இதையறிந்த தேவேந்திரனும் தேவர்களும் பிரஹஸ்பதியை வந்து வணங்கி தங்களுக்கு ஆச்சாரியராக (குரு) இருக்கும்படி வேண்டினர்கள். அதனையேற்று பிரஹஸ்பதியும் தேவராயிருந்து வந்தார். ஒரு சமயம் தான் தங்கி தவம் செய்த இடத்தில் ஒரு ஆலயம் எழுப்ப விரும்பி தேவேந்திரனிடம் கூற அமராதிபனும் தேவ தச்சர்களை சிற்பிகளை கொண்டு அழகான ஆலயம் அமைத்து வழிபட்டனர். அந்த இடமே தற்காலம் மஹேந்திரபள்ளி என வழங்கிவருகின்றது.

ப்ரஹஸ்பதியானவர் 'பிரஹஸ்பதிநீதி' என்ற நூலை எழுதினர். இந்திரனுக்கு நன்மைபுரிய சுக்ரவேஷம் பூண்டு அசுரர்களுக்கு நாஸ்திகம் போதித்தார். தேவர்களுக்கு உதவ தன்மகனை சுக்ராச்சாரியாரிடம் மிருத சஞ்சீவினி மந்திரத்தை கற்க அனுப்பிவைத்தார். தேவேந்திரன் அலக்ஷியம் செய்தபோது அவனை விட்டு விலகிச் சென்றார். வசுமனஸ் என்ற அரசனுக்கு ராஜநீதி, ராஜ தர்மம் உபதேசித்தார். பூலோக வாசியான பலரிஷி குமாரர்களுக்கு வித்தையை கற்பித்தார். இவருக்கு சூரியன் சந்திரன், செவ்வாய் இவர்கள் மிக நண்பர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதனும் சுக்கிரனும் சத்துருக்கள். இவர் பிரம்ம குலத்தி வர். சத்வகுணம் வாய்ந்தவர். சொர்ண நிறமுடையவர். இவர் கேந்திரத்தில் இருந்தால் எல்லா தோஷங் களையும் நீக்கி நன்மை செய்வார். புத்ரபாக்யத்தையும் தனத்தையும் மங்கல நன்மணத்தையும் தருவார். ஆத லால் இவருக்கு புத்ரகாரகன், தனகாரகன் என்றெல்லாம் பெயருண்டு. இவர் கடகராசியில் உச்சபலமும், மகரரா சியில் நீசபலமும் உடையவர். இவர் தான் இருக்கும் இடத்திற்கு 5 ஆம் இடத்தையும், 7 ஆம் இடத்தையும் 9 ஆம் இடத்தையும் பார்ப்பவர். இவர் பார்வையால் மற்ற கிரகங்களால் ஏற்படும் தோஷங்களும் நீங்கும். ஆங்கீரஸ கோத்திரத்தில் தோன்றிய பிரஹஸ்பதி சிந்து தேசத்திற்கு தற்காலம் பஞ்சாப் அதிபதியாக இருந்து கொண்டு நீண்டசதுரமான ஆசனத்தில் அமர்ந்து இருப் பார். கடலை தான்யம், மஞ்சள் நிறவஷ்த்ரம், புஷ்பரா கரத்னம், முல்லை புஷ்பம், எலுமிச்சம் பழ அன்னம், அரசு ஸமித்து, ஸம்ஸ்கிருதபாஷை, அடாணு ராகம், இனிப் பில்பிரியம் உடையவர். ஒரு வருடம் ஒரு ராசியில் சஞ்ச ரிப்பார். இவரது திசாநாத பதவிகாலம், 16இல் நற்பயனை தரக்கூடியது. இந்திர மருத்துவனை அதி தேவதையாகவும், பிரம்மாப்ரத்பதி தேவதையாகவும் கொண்டு ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தியை ஸதா உபாசித்து வருபவர். இவர் பேறு பெற்ற தினமான வியாழக்கிழமை (குருவாரம்) விரதம் பூஜைகள் செய்பவர்களுக்கு குருவின் பரிபூரண கிருபை கிடைக்கின்றது. ப்ரஸ்பதி பேறு பெற்றதலம். மஹேந்திர பள்ளி, இறைவன் சுந்தரேஸ்வரர், இறைவி காந்திமதி, தேவாணுஞ்ச ரிஷீணுஞ்ச குரும் காஞ்சன ஸன் னிபம் வந்த நீயம்த்ருலோகேசம் தம் நமாமி ப்ரஹஸ் பதிம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜாதக பொதுபலன்

லக்னமாகி ஜன்மத்தில் இருந்தால்: நற்குணம், தேஜஸ், தீர்க்காயுள், வித்யை, புத்ரன், தானம், அழகு முதலியன.

2-ம் இடம் குடும்பஸ்தானம் இருந்தால்: இனியனாகவும், போஜனப்ரியதனிகளும் வாக்குசாதுர்யம் உள்ளவர்.

3-ம் இடம் ஸகோதரஸ்தானம் இருந்தால்: ஸாரமறிந்தவனாகவும், சூக்ஷ்ம புத்தியுள்ளவனாகவும், க்ருபணனுயும், ஸகோதர ஸம்பத்து உள்ளவனுயும், பெண்களுக்கு அடிமையாகாதவனுயும் இருப்பர்.

4-ம் இடம் மாதுர்ஸ்தானம் இருந்தால்: தாயினால் சுகம், பந்துக்கள், மனைவி, மக்கள் இவர்களால் சுகம், வாகனம் முதலியன.

5-ம் இடம் புத்ரஸ்தானம் இருந்தால்: புத்ரரால் துன்பம், மந்திரிபதவி, செல்வாக்கு, அஸ்திர சஸ்திர அப்பியாசம் முதலியன.

6-ம் இடம் ருணஸ்தானம் இருந்தால்: மந்தஸ்வாபம், சத்ருவை அடக்குதல், சூபிசார மந்ர சாஸ்திரம் முதலியன.

7-ம் இடம் களத்திர ஸ்தானம் இருந்தால்: நல்ல மனைவி, நல்ல புத்திரன், தர்ம ஞானம், பிதாவின் கௌரவம், பெரிய இடத்து சிநேகிதம், வாகன சுகம் முதலியன.

8-ம் இடம் ஆயுள் ஸ்தானம் இருந்தால்: ஆயுள்விருத்தி, செல்வம், சேலகா விருத்தி, பாடகார்யத்தில் விருப்பம், தாசிஸ்நேகம், புத்ர அதிர்ஷ்டம் முதலியன.

9-ம் இடம் பிதுர்ஸ்தானம் இருந்தால்: தந்தைக்கு மேன்மை, மனைவி மக்கள் சுகம், மந்திரி பதவி, புத்ரன் தனம், தர்மம், ஆசாரியர் அன்பு.

10-ம் இடம் ஜீவனஸ்தானம் இருந்தால்: யசஸ் பலருடன் நட்பு, நல்ல குணம், தனம், ராஜப்ரீதி, ஸத்கர்மாவில் ஆசை, புத்ர பாக்யம.

11-ம் இடம் லாபஸ்தானம் இருந்தால்: தனலாபம், பயமில்லாமை, அல்ப புத்தி, பிரஸித்தி.

12-ம் இடம் விரயஸ்தானம் இருந்தால்: புத்திவிரயம, போகம், ஸேனகா விருத்தி, புத்திர தோஷம், துராசாரம் முதலியன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்புலன்களையும் கட்டுப்படுத்துவதனால் பெறக்கூடிய பயன்

க. குருநாதன்

சாதாரணமாக மானிடர் வாழ்வில் பஞ்சேந்திரியங்கள் யாவும் சதா இன்ப உணர்வினைப் பெறவே விழைகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு அதன் தேவையைப் பூர்த்தி செய்ய எத்தனிக்கிறோமோ அவை மேன்மேலும் புலன்களின் வாயிலாக இன்பத்திலே நாட்டம்கொள்ள விழைவதை அநுபவவாயிலாக காணக்கூடியதாக இருக்கின்றது. ஏனெனில் இந்நிகழ்ச்சியானது ஒரு உயிர்த்தத்துவத்தின் அடிப்படைத் தேவையை பிரதிபலிப்பதனாலாகும். உயிர்த் தொகுதிகள் தோன்றி வாழ்ந்து மடியும்வரை இது நடைபெற்றுக்கொண்டேயிருக்கும். ஆயினும் மனித வாழ்க்கை இம்முறையிலே நடந்து முடிவதாயின் ஏனைய ஜீவராசிகட்கும் எமக்கும் ஒருவித வித்தியாசமின்றிப் போவதுடன் எம்மை நாமே அறிந்து கொள்ளாமலும், பிறந்ததன் பயனைக்கருத்திற் கொள்ளாமலும் வறிதே காலத்தை வீணாக்குவதாகும்.

நாம் யார்? நாமேன் இவ்வுலகத்திற்கு வந்தோம்? எமக்கெல்லாம் ஆதாரம் யார்? அது எத்தன்மையானது? இங்கிருந்து எங்கு செல்கின்றோம்? இடையில் என்னென்ன செய்கிறோம்? என்பவை தத்துவ ஞானிகள் மட்டும் தான் சிந்திக்க வேண்டுமென்றில்லை. சாதாரணமான எவரும் சிந்தனை செய்து எல்லாவற்றையும் ஆட்டிப் படைக்கும் திறன் கொண்ட மாபெரும் சக்தியின் பேரறிவினை வியப்பதுடன் நில்லாது நாமும் அதன் சொரூபமாக ஆக முயலுதல் கூடும் என்பதனையும் அனுபவ மூலமாக அறிய முடியும். இவ்வித முயற்சிக்கே சமய வாழ்க்கை நம்மை இட்டுச் செல்கிறது. கடவுள் என்றாலே எல்லாவற்றையும் கடந்தும் ஊடுருவியும் சர்வவியாபகமாக எங்கும் நிறைந்திருக்கும். சர்வ வல்லமையற்ற மனோவாக்குக் காயத்திற்கு எட்டாத பொருளுமாகும். உபநிடதம் என்பது கடவுளுக்கு அண்மித்திருத்தல் என்ற பொருளையும் கொண்டது. அதனைப் பிரமாணமாகக் கொள்ளும் வேதாந்திகள் பரப் பிரம்மம் என்றும், சைவர்கள் சிவன் எனும் செம்பொருளென்றும், வைஷ்ணவர்கள் பிரபஞ்சமெங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும் மகாவிஷ்ணு அல்லது நாராயணன் என்றும் பல வித நாமபேதங்களில் அப்பரம்பொருளை அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி நாம் பிறவிப் பயனையெய்துவதெனில் அறிவால் அறிந்தும் உணர்வால் உணர்ந்தும் அப்பரம் பொருளுடன் அனுபவ பூர்வமாக ஒன்றனைய முயலுவதாகும். அறிவு எனும் பொழுது வெறும் நூலறிவை மாத்திரம் குறிப்பதாகாது. வைதீக மறை குறிப்பிடும் எழுதா மறை அதாவது கர்ண பரம்பரையாக ஓதக் கேட்கப்பட்டு வந்த வேதங்கள் எட்டும் நுண்ணறிவையே கருத வேண்டும். வெறுமனே பெறப் படும் கல்வி ஒருவனை கல்வியறிவுற்றவனாகச் செய்யுமே அன்றி நிறைவுற்றவனாகச் செய்யாது. கடவுள் பக்தியுடன் ஒழுக்கமும் ஒருங்கு சேர சில நியமங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வரின் பலனுண்டாகும்.

"கற்றதனாலாய பய னென்கொல் வாலறிவன்
நற்றாழ் தொழார் எனின்" —என்றும்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலால்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

எனவும் திருக்குறள் கூறுவதையும் நாம் நோக்க வேண்டும். மேலும் நல்லொழுக்கத்தைக் கடைக்கொள்ளும் ஒருவன் அத்துமீறிய புலன்களின் இச்சைவழிச் செல்வதையும் நிறுத்தல் வேண்டும். அப் புலன்களையும் ஐந்து வேடர்களாகத் திருமந்திரம் மற்று சிவஞானசித்தியார் உவமிப்பதையும் நாம் காணலாம். வேடரென்று உவமித்ததெதற்கெனில் தம் பாட்டிற்கு அவைகள் கட்டுக்கடங்காமல் செல்லும் பெற்றிவாய்ந்ததென்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே. ஆயினும் இஃதிவ்வாறிருக்க நாம் எமது உடலை அவயவத்தை கடவுட்காட்சி தொண்டு முதலாம் இறைபணிக்கு அர்ப்பணிக்கும் சரியை, கிரியை, முதலானவற்றிலும் சித்தம் புத்தி அகங்காரம் ஆகிய மூன்றும் சேர்ந்த மனம் யோக சாதனை ஞான விசாரம் ஆகியவற்றிலும் நிலை நிறுத்தப்படின் பேரின்பம் காண இயலுமென்பதை மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய பின் வரும் பாடலில் காணலாம்.

"மாறிநின்றென்னை மயக்கிடும் வஞ்சப்புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின்றென்னுள் ளெழு பரஞ்சோதி உள்ளவா காணவந்தருள்வாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடையன்பே"

இன்னும் அருணகிரிநாதரும் பின்வரும் அனுபூதிப் பாடலில் ஐம் புலன்களையும் செவ்வனே வழிநடத்தல் எத்துணை அவசியமென்பதை யும்நமக்கெல்லாம் உணர்த்தினர்.

"கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று
உய்வாய் மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே" —கந்தரனுபூதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஜ்ஞம்ருதம்

(ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா)

நல்லதாயினும் அது நல்லோர்களிடத்திலிருந்து வரவேண்டும்.

கர்மரகசியம் தெரிந்தவனுக்கு வாழ்க்கை விளையாட்டரங்கம் போன்றது.

சேர்ந்து வாழ்ந்தாலும் நீரிற் கலந்த எண்ணெயைப்போல் வாழ்.

உன்னை உன்வசப்படுத்தினால், மற்றவர்கள் உன்வசப்படுவார்கள்.

உண்மை இருக்கும் இடத்தில் அழகும், இளமையும் பொலியும்.

அடிமைகள் வாழ்ந்தாலும், நலன் பெறுவதற்கு ஒன்றுமேயில்லை.

மரணபயம் இருக்கின்றவன் விடுதலையின் உயர்ந்த சுகத்தை அறிவதில்லை.

அரிய சந்தர்ப்பங்கள் பலதும் உன் எதிரில் நிற்கின்றன: குழைத்து ஊட்டும்போது உண்ண மறுக்கும் குழந்தைபோல், சந்தர்ப்பத்தை உணர்ந்து, செயல்படுத்தத் தெரியாதவர்கள், துன்பத்திலிருந்து மீளுவதில்லை.

காலத்தைப் பிரயோசனப்படுத்தத் தெரியாதவர்களுக்குக் காலமும், காலனும் ஒன்றே.

உபயோகமுறை தெரிந்தால் நஞ்சும் அமுதமாகும்.

உரிமை இல்லாத இடத்தில் உரித்துடன் பேசி விரோதிகளைத் தேடாதே.

மனிதா! உனது மெய்யன்பை உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் இவ்வுலகம் இல்லை. அதை உணர்ந்து அன்புடன் அரவணைக்கும் இறைவனிடம் அன்பு செலுத்தினால், வஞ்சனை இல்லாத பேரன்பில் மூழ்கி வாழலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G.P.O. as a Newspaper M. L 359/00.

# ஆத்மஜோதி
## ஆயுள் சந்தா ஆதரவாளர்
### திரு. எம். நடராஜ பிள்ளை அவர்கள்
33, கொத்மலை வீதி — நாவலப்பிட்டி.

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| ஏழாலை | ரூபா | 10–00 |
| பன்னிரு மாத நினைவுகள் | ரூபா | 10–00 |
| பன்னிரு திருமுறைத் திரட்டு | .... | 5–00 |
| கந்தக் கதம்பம் | .... | 3–00 |
| பாட்டாளி பாட்டு | .... | 1–50 |
| தீங்கனிச் சோலை | .... | 2–50 |
| இளங்கோவின் கனவு | .... | 2–25 |
| ஆத்மநாதம் | .... | 3–00 |

**விற்பனையாளருக்கு 20 வீதம் கழிவு உண்டு**

விபரங்களுக்கு:-

**ஆத்மஜோதி நிலையம்**
நாவலப்பிட்டி (ஸ்ரீலங்கா)

## ஆத்மஜோதி சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இலங்கைக்கு மாத்திரம் வருடச் சந்தா | ரூபா | 10-00 |
| இந்தியாவுக்கு வருடச் சந்தா | ரூபா | 20-00 |
| இவை தவிர்ந்த ஏனைய நாடுகள் | | 5 வெள்ளி |
| ஆயுள் சந்தா | ரூபா | 250-00 |
| தனிப் பிரதி | ரூபா | 1-00 |

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி – (ஸ்ரீலங்கா)

ஆசிரியர்: நா. முத்தையா
அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி.
அச்சிட்ட திகதி: 15-6-70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org